www.padippakam.com

# செய்திக்கதிர்

★ ஜூன், ஜூலை - 89 ★

★ 14 ★




லெப். சீலன்

15 ஜூலை 83



லெப். செல்லக்கிளி

'23 ஜூலை '83'



கப்டன் ரஞ்சன்

13 ஜூலை 84



"தமிழீழத்தில் தமது தியாகங்கள் மூலம் புதியதொரு எழுச்சியை உருவாக்கிய இந்த "வரலாற்று நாயகர்களை" வணங்குவோம் !

இவர்கள் விதைத்த போராட்ட விதைகள் தான் இன்று மாபெரும் மக்கள் போராட்டமாக விடுதலையை நோக்கி முன்னேறுகின்றது !!!

வெளியீடு:

**தமிழர் நலன்புரி மன்றம் - டென்மார்க்**

**THAMILAR NALLANPURI MANTRAM - DENMARK**

TAMILSK VELFÆRDSFORENING - DANMARK

POSTBOX 47 • 7600 STRUER • TLF. 97 85 24 14

படிப்பகம்

www.padippakam.com

1981ம் ஆண்டில் நமது தமிழீழ தேசதலைவர் பிரபாகரன் எழுதிய கவிதை

# நாம் அணிவகுத்துள்ளோம்....





நாம் அணிவகுத்துள்ளோம்......
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்.
நாம் அணிவகுத்துள்ளோம்
இழந்த எமது நாட்டை மீட்க!

எதிரி எமது நாட்டை
வஞ்சகமாக அபகரித்துவிட்டான்!
அதைக்கண்டு நாம் அஞ்சவில்லை!

புயலெனச்சீறி
இழந்த நாட்டை மீட்க
நாம் அணிவகுத்துள்ளோம்......
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!

எமது படையணி கடக்க வேண்டியது
நெருப்பாறென்பது எமக்குத்தெரியும்!
ஆனால்.........
அதைத் தாங்கக் கூடிய
மக்கள் ஆதரவென்னும்
கவசம் எம்மிடம் உண்டு!

எதிரியின் ஆயுதமோ பலம் பொருந்தியது!
எமது
ஆத்ம பலமோ அதைவிட வலிமைவாய்ந்தது!
எதிரியின் குண்டுகள் வெடிக்கும்......
ஆனால்
எமது விடுதலை நெஞ்சங்கள்
எரிமலையென வெடிக்கும் சத்தத்தில்
அதன் சத்தம் அமுங்கிவிடும்!

நாம் அணிவகுத்துள்ளோம்......
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!
எமது அணிவகுப்பு
எமது தமிழ்ஈழ மக்களிடையே
அணிவகுத்துச் செல்கிறது!

நாம் செல்லும் இடமெல்லாம்......
எமது எதிரிகள் அஞ்சி ஓடுகிறார்கள்!
மக்களிடம் உள்ள
பிரதேசம் சாதி
மதமென்னும் பேய்களும்
அலறி ஓடுகின்றன......

எமது படையணி விரைகிறது......
எமது தேசத்தை மீட்க!

நாம் செல்லும் இடமெல்லாம்
காடுகள் கழனிகள் ஆகின்றன!
வெட்டிப் பேச்சு வீரர்கள்
மிரண்டோடுகின்றனர்......!

உழைப்போர் முகங்களில்
உவகை தெரிகிறது.
ஏழைகள் முகங்களில்
புன்னகை உதயமாகிறது.

(தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்
திரு. வே. பிரபாகரன் அவர்களால் 1981-ஆம்
ஆண்டில் எழுதப்பட்ட கவிதை)

படிப்பகம்

www.padippakam.com




தமிழீழத்தின் தலைமகன், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதான ராணுவ தளபதி வே. பிரபாகரன் இந்திய பத்திரிகை ஒன்றில் 'பிரபாகரன் சுட்டுக்கொலை' என்ற செய்தியை புன்சிரிப்புடன் படிக்கும் காட்சி...

"ஆயிரம் களங்கள் கண்ட
அண்ணனை; தமிழீ ழத்தின்
பாயிரம் ஆகப் போகும்
பரணியின் தலைவன் தன்னை
ஏவிய படைகள் வந்து
என்னடா செய்யும்; எங்கள்
காவியம் களத்தில் வெல்லும்.
காலங்கள் அவன்பேர் சொல்லும்"

www.padippakam.com

ஒரு ஆய்வு கண்ணோட்டம்.

(இது ஒரு பத்திரிகையாளரின் கண்ணோட்டம்).

# விடுதலைப்புலிகள்-ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை வரலாற்றை முன்னேற்றுவதற்கான ஒரு ராஜதந்திர நடவடிக்கையே

விடுதலைப்புலிகள்-ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தைகள் தமிழீழவிடுதலைப்போராட்ட வரலாற்றில் ஆழமான திருப்பங்களை ஏற்படுத்தக்கூடிய ஒரு சிறந்த ராஜதந்திர நடவடிக்கையாக அமைகின்றது. ஆனால் இப்பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தமிழ்பேசும் மக்களில் சிலரிற்கு சில சந்தேகங்களும், குழப்பங்களும் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் காணப்படுகின்றன. பின்வரும் வினாக்களின் அடிப்படையில் இவை ஏற்படலாம்.

1. இனவாத அரசான ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தலாமா?
2. ஸ்ரீலங்கா அரசு தமிழ் பேசும் மக்களிற்கு உரிமைகளை வழங்குமா?
3. இந்தியாவினை முற்றுமுழுதாகப் பகைக்கலாமா?
4. இந்தியா வெளியேறியபின் ஸ்ரீலங்கா ராணுவம் தமிழ் பேசும் மக்களிற்கு எதிராக இனப்படுகொலைகளை மேற்கொள்ளுமானால் என்ன செய்வது?

இத்தகைய வினாக்கள் வரலாற்றுப்படிப்பினை காரணமாக எழுவது இயல்பானதே. இன்றைய கால கட்டத்தில் இவற்றிற்கான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுதல் மிக அவசியமானது.

## 1. இனவாத அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தலாமா?

இன்று விடுதலைப்புலிகள் சிங்கள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை சர்வதேச நிலைமைகளுடன் இணைத்து நோக்கினாலே இக்குழப்பத்திற்கான தெளிவினைப் பெற்றுக் கொள்ள முடியும். இன்று சர்வதேச அரங்கில் முரண்பாடுகளை பேசித்தீர்த்துக்கொள்ள வேண்டும் என்னும் கருத்து மேலோங்கி வளர்ந்து வருகின்றது. இக்கருத்தின் வளர்ச்சிப் போக்கில், எவர்கள் பேச்சுக்கள் மூலம் முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்கு கூடுதலான முன்னெடுப்புக்களைச் செய்கின்றார்களோ, அல்லது அவ்வாறு செய்வதாகக் காட்டிக் கொள்கின்றார்களோ அவர்களே சர்வதேச ஆதரவினையும் அனுதாபத்தினையும் தம்பக்கம் திருப்பிக் கொள்ளக் கூடிய நிலமை உருவாகியுள்ளது. நாடுகளிற்கிடையேயான பிரச்சினையாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு நாட்டுக்குள்ளேயான தேசிய இனப்பிரச்சினையாகவோ, அல்லது வர்க்கப்பிரச்சினையாகவோ இருந்தாலும் சரி அப்பிரச்சினைகளுடன் தொடர்புபட்ட தரப்பினர் இந்த சர்வதேச அழுத்தத்திற்கு முகம்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். இத்தகைய ஒரு சூழ்நிலையும்தான் எதிரும் புதிருமான அமெரிக்க சோவியத் அரசுகளும் ஆயுதக்குறைப்பு தொடர்பான பேச்சுக்களை நடத்த வேண்டிய நிலமையினை ஏற்படுத்தியது எனலாம். (இப்பேச்சுக்களிற்கு இவ்விரு வல்லரசுகளினது நலன்களும் காரணமாக அமைந்துள்ளன). முற்போக்கு சோசலிச கொள்கைகளைப் பின்பற்றுவதாகக் கருதப்படும் சோவியத் யூனியன், (சோவியத் யூனியனின் சோசலிசக் கொள்கைகள் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுகின்றன என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டியது). சர்வதேச பயங்கரவாதத்தின் சூத்திரதாரியாகக் கருதப்படும் அமெரிக்காவுடன் பேச்சுக்கள் நடத்தலாமா என்ற கேள்வியே எழாத வகையில் இப்பேச்சுவார்த்தைகள் உலக அரங்கில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

மேலும், குறிப்பாக தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வாக தனிநாடு கோரி போராடும் போராட்ட சக்திகளை 'பிரச்சனையை பேசித்தீர்த்தல்'. எனும் அடிப்படையில் அமைந்த சர்வதேச அழுத்தம் வெகுவாகப்பாதிக்கின்றது. எந்தவித பேச்சுவார்த்தைகளையும் நிராகரித்து தத்தமது மக்களிற்கான போராட்டத்தை முன்னெடுக்க முடியாத நிலமை உலகின் பல்வேறு போராட்டச்சக்திகளிற்கும் உருவாகியுள்ளது. இஸ்ரேல் என்ற நாடு இருப்பதையே எதிர்த்துவந்த பலஸ்தீன விடுதலை இயக்கம், இன்று இஸ்ரேலின் இருப்பிற்கு அங்கீகாரம் அளித்துவிட்டு, பலஸ்தீன அரசினைப் பிரகடனப் படுத்தியதோடு இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்டிருக்கும் அரபுப்பிரதேசங்களிற்கும் உரிமைகோரி, இதுதொடர்பாக இஸ்ரேலுடனும் பேச்சுவார்த்தை நடத்த தயாராகி இருப்பது ஓர் மிகச்சிறந்த ராஜதந்திர நடவடிக்கையாகக் கருதப்படுவதும் இன்றைய சர்வதேச அழுத்தத்தை தங்களிற்கு

சாதகமாகப் பயன்படுத்தியமையால்தான்.

இத்தகைய சூழ்நிலையின் அடிப்படையில்தான் சிங்கள இனவாதம் காரணமாக தேசிய அடிப்படையில் முரண்பாட்டினைக் கொண்டிருக்கும் இரு சக்திகளான விடுதலைப் புலிகள் - ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தையினை நோக்க வேண்டும்.

சர்வதேச அபிப்பிராயத்தை எமக்குச்சாதகமாக வென்றெடுத்தல் என்பதோடு இந்தியப்படைகளை வெளியேற்றுவதற்கான சூழலை உருவாக்கவும் இப்பேச்சுவார்த்தை அவசியமாக உணரப்பட்டது. தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தினை ஒப்பந்தம்மூலம் நசுக்க முயன்று, அதிற் தோல்வி கண்டதன் பின்னர் ராணுவப் பயங்கரவாதம் மூலம் தமிழ்த்தேசிய எழுச்சியினை நசுக்க முற்படும் இந்திய அரசின் படைகள் வெளியேற்றப்படுவது தமிழ்பேசும் மக்களின் தரப்பில் அத்தியாவசியமாக இருக்கும் அதே வேளை, சிங்கள மக்களின் இறைமையினைப் பாதுகாக்கவும், இந்திய ஆக்கிரமிப்பு தொடர்பான அச்ச உணர்வு காரணமாகவும் சிங்களமக்களும் இந்தியப்படைகள் வெளியேற்றப்படு வதை வலியுறுத்துகின்றார்கள்.

'இந்தியப்படைகளை வெளியேற்றுதல்' என்பதில் உள்ள அடிப்படை ஒற்றுமை விடுதலைப்புலிகள் - ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை இடம் பெறுவதற்கான அத்திவாரத்தினை அமைத்துக் கொடுத்தது எனலாம். ஒரு பொதுநோக்கத்திற்காக இரு முரண்பட்ட சக்திகள் பேச்சுக்களில் ஈடுபடுவது வரலாற்றிற்கு ஒன்றும் புதியதல்ல.

யப்பானியர்கள் சீனாவினை ஆக்கிரமித்தபோது, நிலப் பிரபுத்துவத்தை தகர்த்தெறிந்து புதியதோர் சமூகத்தை அமைக்க புரட்சிகர யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மாவோ-சே-துங்கும், நிலப்பிரபுத்துவத்தை தாங்கி நின்ற அரசிற்கு தலைமைவகித்த 'சியாங்கேஷே' யுடன் யப்பானியர்களிற்கு எதிராக தேசியயுத்தத்தை நடத்த யுத்தத்தவிர்ப்பு ஒப்பந்தத்திற்கு வந்த நிகழ்வும், விடுதலைப்புலிகள்-ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை நிகழ்வும் வரலாற்று ஒற்றுமைத் தன்மையினைக் கொண்டுள்ளன. பிற்போக்கு அரசுடன் உடன்பாட்டிற்குப் போவதா என மாவோ யுத்தத்தவிர்ப்பிற்கு மறுத்திருந்தால் மாவோவின் புதிய ஜனநாயகப் புரட்சி வெற்றிப்பாதைக்குச் சென்றிருக்குமா என்பது சந்தேகத்திற்குரியதே. சூழ்நிலைகளிற்கேற்ப பொருத்தமான, தேவையான அரசியல் நகர்வுகளை தந்திரோபாய ரீதியில் மேற்கொள்ளல் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க அவசியமானது என்பதனை சீன உதாரணம் நிரூபிக்கின்றது.

எமது வரலாற்றினை முன்நோக்கி நகர்த்துவதற்கான சூழ்நிலையினை உருவாக்கமுடியும் என்பதன் அடிப்படையிலேயே விடுதலைப்புலிகள் சிங்கள அரசுடனான இப்பேச்சுக்களை ஓர் ராஜதந்திர நகர்வாக மேற்கொள்கின்றனர். எனவே இப்பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இனவாத அரசுடன் பேசலாமா என்ற ரீதியில் குழப்பமடைவது அர்த்தமற்றது.

## 2. ஸ்ரீலங்கா அரசு தமிழ்பேசும் மக்களிற்கு உரிமைகளை வழங்குமா?

எமது கடந்தகால வரலாற்றின் அடிப்படையில் பலரிற்கும் இந்தசந்தேகம் எழுவது தவிர்க்கமுடியாததே. ஸ்ரீலங்கா அரசாங்கங்களின் கடந்தகால ஏமாற்று நடவடிக்கைகள் இப்பேச்சுவார்த்தைகளில் ஒரு பலத்தை விடுதலைப்புலிகளிற்குக் கொடுத்துள்ளது என்பதனை சற்று ஆழமாக நோக்கினால் புரிந்துகொள்ளமுடியும்.

சிறிலங்கா அரசின் வெறும் வாக்குறுதிகளை நிகாரிப்பதற்கும் சட்டமாக்கப்படவேண்டிய விடயங்கள் சட்டமாக்கப்படுவது மட்டுமின்றி நடைமுறையில் நிறைவேற்றப்படுகின்றதா என்பதனை உறுதிசெய்யும் வரை விட்டுக்கொடுப்புகளை தவிர்த்துக்கொள்வதற்கும் சிறிலங்கா அரசுகளின் கடந்த கால ஏமாற்று வரலாற்றை ஆயுதமாக விடுதலைப் புலிகள் உபயோகிக்க முடியும். மேலும் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக எந்தவிதமான விட்டுக் கொடுப்புக்களையும் விடுதலைப்புலிகள் செய்யவில்லை.

"தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளை சமதர்ம தமிழீழம் மூலமே தீர்க்க முடியும்; ஆனால் தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய மாற்றுத்தீர்வினை எவரும் முன்வைத்தால் அதனைப்பரிசீலிக்க தயாராக இருக்கின்றோம்" என இனப்பிரச்சனைக்கான பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தங்களின் நிலைப்பாட்டை விடுதலைப்புலிகள் ஏற்கனவே வெளிப்படுத்தியிருந்தனர். இந்த நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே சிறிலங்கா அரசு முன்வைக்கும் தீர்வு முறை விடுதலைப்புலிகளினால் அணுகப்படும் என்று பலராலும் அனுமானிக்கப்படுகின்றது.

ஆனால் தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஒரு தீர்வுமுறைக்கு சிறிலங்கா அரசால் போகமுடியுமா எனும் சந்தேகமும் பலரால் எழுப்பப்படுகின்றது. மக்கள் விடுதலை முண்ணனியினரின் (J.V.P) அரசியல் இராணுவ நடவடிக்கைகளை எதிர்த்தும், பௌத்தபிக்குகளின் அரசியல் செல்வாக்குகளை நிராகரித்தும் இனவாதிகளின் எதிர்ப்புக்குரலை மீறியும், சிறிலங்கா ஜனாதிபதியினால் செயற்படமுடியுமா என்ற தர்க்கத்தின் அடிப்படையில் இச் சந்தேகம் எழும்பியுள்ளது..

இன்றைய ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு வரலாறு சில உண்மைகளை உணர்த்தியிருக்கும்.

1. தமிழ்பேசும் மக்களுக்கு உரிமைகளை வழங்காது அவர்களை இரண்டாந்தர பிரசைகளாக தொடர்ந்து வைத்திருக்க முனைந்தால் அது இந்தியாவின் பிராந்திய விஸ்தரிப்பு வாதத்தினை நியாயப்படுத்துவதற்கு இந்திய அரசுக்கு வாய்ப்பினைக் கொடுத்துவிடும் என்பது.
2. உலகின் நாலாவது ஆவது பெரிய இராணுத்தினாலேயே அழிக்க முடியாத அளவுக்கு பலத்தினையும் உறுதியையும் கொண்ட விடுதலைப்புலிகளை இராணுவரீதியில் சிறிலங்கா படையால் வெற்றி கொள்ளமுடியாது என்பது.
3. இந்தியாவுடன் இணைந்து சிங்கள மக்கள் மீதான ஆக்கிரமிப்பினை தமிழர்கள் மேற்கொண்டுவிடுவார்கள் என்ற அச்சம் அர்த்த மற்றது என்பது
4. பதவிகளையோ, அல்லது சலுகைகளையோ வழங்கி விடுதலைப்புலிகளை விலைபேசமுடியாது என்பது

இந்த உண்மைகள் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அர்த்தமுள்ள தீர்வு ஒன்றை முன்வைப்பதற்காக இலங்கை ஜனாதிபதியினை செயற்பட வைக்கலாம். அவ்வாறு சிறிலங்கா அரசால் உரிய தீர்வுமுறைக்கு போகமுடியாவிட்டால் தமிழீழமே தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைக்கான தீர்வு முறை என்ற விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு உறுதியாக நிருபணமாகின்றது.

இது மட்டுமின்றி, மேடை அரசியலை நடத்தி, பேச்சுவார்த்தைகளை நடத்தி பேச்சுவார்த்தைகளை அரசியல் இருப்பிற்கான விடயமாக கருதும் சக்திகளைப் போலன்று தமது பலத்தினையும் உறுதியினையும் உணர்த்தியபின்னர், இந்தியா வெளியேறும் வரை யுத்த நிறுத்தம் என்பதற்கே இடமில்லை என்று பிரகடனப்படுத்திய போர்க்குணம்சம் கொண்டவர்களாகவே விடுதலைப்புலிகள் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்கின்றனர். உயிர்வாழ்வதற்கு கவசமாக பயன்படுத்துவதனை நோக்கமாக கொண்டோ அல்லது பலவீனத்தின் வெளிப்பாடாகவோ அவர்கள் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவில்லை.

www.padippakam.com

எனவே, சிறிலங்கா அரசு உரிமைகளை வழங்காது விடின் தமிழீழம் என்ற தேவையின் அவசியம் உறுதிப்படுத்தப்படுவதற்கு இப்பேச்சுவார்த்தைகள் பயன்படும். தமிழீழம் உருவாகுவதினை தனது நலன்களுக்காக தடுத்துவரும் இந்தியாவின் படைகளை வெளியேற்றுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கும் இப்பேச்சுவார்த்தைகளில் விடுதலைப்புலிகள் கலந்து கொண்டமை எமது போராட்டத்தின் வெற்றிக்கு வழிசமைப்பதாக அமையும் என உறுதியாக நம்புவோம்.

## 3. இந்தியாவை முற்றுமுழுதாக பகைக்கலாமா?

தற்போதைய இந்திய அரசினையே முழு இந்தியாவாக பார்க்கும் தவறான பார்வை காரணமாகவே இக்கேள்வி எழுகின்றது. இந்திய மக்கள் மனதில் இருந்து அந்நியப்பட்டுச்செல்லும் ஓர் அரசாகவே இன்றைய இந்திய அரசு விளங்குகின்றது. இந்திய தேசத்தின் ஆட்சியாளர்களைத் தீர்மானிக்கும் இந்திய மக்களையும், மக்களின் குரலாக வெளிவரும் பத்திரிகைகளையும், இந்திய எதிர்க்கட்சிகளையும் உள்ளடக்கியதாகவே நாம் இந்தியாவை நோக்க வேண்டும்.

இந்திய மக்களையும், பத்திரிகையாளர்களையும், இந்திய தேசத்தையும் நேசசக்திகளாகவே விடுதலைப்புலிகள் கருதி வந்திருந்தனர். விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டில் தங்கியிருந்த போது மக்கள் விரோத நடவடிக்கைகள் எதிலுமே ஈடுபடவில்லை. இலங்கை இந்திய ஒப்பந்தம் காரணமாக ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட போது, "இந்திய மக்களை நேசிப்பதன்காரணமாக, இந்திய படைகளுடன் மோத நாம் விரும்பவில்லை. இதனால் ஆயுதங்களை ஒப்படைக்க தீர்மானிக்கின்றோம்." என விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் 1987 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நாலாம் திகதி சுதுமலையில் இடம்பெற்ற கூட்டத்தில் தெரிவித்திருந்தார். இந்திய அரசின் தவறான போக்கால், தம்மீது திணிக்கப்பட்ட யுத்தத்தினை எதிர் கொண்ட பின்னரும் இந்திய மக்களை நேசிக்கின்றோம் என்பதனை விடுதலைப்புலிகள் வெளிப்படுத்தி வருகின்றனர். தாம் கைது செய்த 18 இந்திய இராணுவத்தினரை விடுதலை செய்த போது, இந்திய மக்கள் மீது கொண்ட நல்லெண்ணம் காரணமாக இந்திய ஜனநாயகம் இறந்துவிடாமல் இருப்பதற்காக உழைத்துக்கொண்டு இருக்கும் இந்திய பத்திரிகையாளர்கள் முன்னிலையில் இந்திய இராணுவத்தினரை விடுதலை செய்கின்றோம் என விடுதலைப்புலிகள் குறிப்பிட்டு இருந்தனர். இது மட்டுமின்றி இந்திய எதிர்க்கட்சிகளுடனும் இலங்கை இனப்பிரச்சனையில் இந்திய அரசின் தவறான அணுகுமுறை குறித்து பேச்சுக்கள் நடத்தியிருந்தனர். இவ்விடயங்களில் இருந்து இந்திய தேசத்தை விடுதலைப்புலிகள் பகைநாடாகக் கருதவில்லை என்பதனைப் புரிந்து கொள்ளமுடியும்.

தேசநலன்களை பேணுவதாகக் கூறிக்கொண்டு இந்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் ஈழத்தமிழ் பேசும் மக்களின் நலன்களை புறக்கணிக்கும் தன்மைகளைக் கொண்டிருப்பதோடு இந்திய தேசத்தின் நலன்களையும் பாதிக்கக்கூடிய தாக்கங்களையும் ஏற்படுத்தி வருகின்றது என்பதனை இந்திய மக்கள் இன்று உணர்ந்து வருகின்றனர்.

அண்மையில் ஒரு இந்திய ஆங்கில சஞ்சிகை நடத்திய அபிப்பிராய வாக்கெடுப்பின் படி 59.6 வீத இந்தியமக்கள் இந்தியபடைகள் இலங்கையினை விட்டு வெளியேர வேண்டும் என விரும்புகின்றார்கள் எனத்தெரிய வந்துள்ளது இவ்வீதம் மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன. பல இந்தியப்பத்திரிகைகள் இலங்கைப்பிரச்சனையில் இந்திய அரசின் போக்கை காரசாரமாக கண்டித்து வருகின்றனர். குர்திப்நாயர் போன்ற பிரபல இந்திய பத்திரிகையாளர்களும் இந்திய படைகள் வெளியேற வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளனர். இலங்கையில் போரிட்டுக்கொண்டிருக்கும் இந்தியப்படை வீரர்களின் விரக்திகலந்த, தோல்விமனப்பான்மையை வெளிப்படுத்தும் வாக்கு மூலங்களும் இந்திய பத்திரிகைகளில் இடம்பெற்று வருகின்றன.

இதுவரை காலமும் இந்தியா ஈடுபட்ட யுத்தங்களான இந்திய-பாகிஸ்தான் யுத்தங்களும், இந்திய-சீன யுத்தமும் இந்தியாவின் தேசிய யுத்தங்களாக, இந்திய தேசத்தை பாதுகாக்கும் யுத்தங்களாக இந்திய மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்த யுத்தங்களில் இந்தியக் கலைஞர்கள் யுத்த முனைக்குச் சென்று இந்திய இராணுவத்தினருக்கு மனோபலத்தை அளிக்கக்கூடிய கலை நிகழ்ச்சிகளையும் நடத்தி இருந்தனர். ஆனால் விடுதலைப்புலிகள் - இந்திய யுத்தத்தினை ஓர் அர்த்த மற்ற யுத்தமாகவே பெரும்பான்மை இந்திய மக்கள் கருதுவதுடன் இந்திய அரசின் பொறுப்பற்ற நடவடிக்கைகளினால் ஏராளமான இந்திய இராணுவத்தினர் அநியாயமாக பலியாகிக்கொண்டு இருக்கின்றனர் என்று இந்திய அரசின் மீது குற்றம் சுமத்தியும் வருகின்றனர். இந்திய இராணுவத்தினர் மத்தியிலும் இந்த உணர்வு காணப்படுகின்றது. இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டிருந்த ஒரு ஈழத்து பத்திரிகையாளருடன் உரையாடும்போது இந்திய இராணுவ அதிகாரி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார் "இன்னொரு நாட்டிற்காக தேவையற்ற விதத்தில் உயிரிழந்து கொண்டிருக்கின்றோம். இந்நிலைக்கு ராஜிவ்காந்தி அரசே பொறுப்பேற்கவேண்டும். அடுத்த தேர்தலில் இராணுவத்தினரின் வாக்குகள் நிச்சயமாக ராஜிவ் காந்தியின் கட்சிக்கு கிடைக்கப்போவதில்லை".

இந்திய அரசினைக் கண்டித்தும் இந்திய இராணுவத்தினரின் கொடூரங்களை வெளிப்படுத்தியும், இந்திய கலைஞர்கள் விடுதலைப்புலிகளுக்காக கலைப்படைப்புகளை உருவாக்கும் நிலையும் இன்று உருவாகியுள்ளது. பல இந்தியக் கட்சிகளும் இலங்கைப் பிரச்சனையில் இந்திய அரசின் அணுகுமுறைகளை கண்டித்து வருவதுடன் இந்திய படைகள் இலங்கையினை விட்டு வெளியேற வேண்டு மென்பதனையும் முன் வைத்துள்ளன. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஆதரித்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் மாக்சிற் கம்யூனிஸ்ட் கட்சியும் கூட இந்திய படைகள் வெளியேற வேண்டுமென்ற கருத்தை கூறியுள்ளன.

இந்தியப்படைகள் இலங்கையைவிட்டு வெளியேற வேண்டுமென்ற நிலைப்பாட்டிற்கு இந்தியாவிலேயே பெரும் ஆதரவு கிடைத்து வருகின்றது. இந்நிலையில் இந்திய அரசுடன் விடுதலைப்புலிகள் கொண்டுள்ள முரண்பாட்டை இந்திய தேசத்துடனான முரண்பாடாகவோ, இந்திய மக்கள் சக்தியுடனான முரண்பாடாகவோ கருதிக்கொள்வது அர்த்த மற்றது.

## 4. இந்தியப்படைகள் வெளியேறிய பின் ஸ்ரீலங்காப்படைகள் இனப்படு கொலைகளைச் செய்தால் என்ன செய்வது?

இந்தியப்படைகள் வெளியேறுமானால் ஸ்ரீலங்காப் படைகள் தமிழர்களை அழித்தொழித்துவிடும் என்று இந்திய அரச மக்கள் தொடர்புச் சாதனங்கள் பெரும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. தனது குகைக்குள் மிருகங்களை அடைத்து வைத்திருந்து, தனது தேவைக்கேற்ப அவற்றை கொன்று தின்னும் சிங்கம் ஒன்று, குகைக்கு வெளியே நீங்கள் சென்றாலோ அல்லது எனது காவலை விலக்கிக் கொண்டாலோ வேட்டைக்காரர்கள் உங்களைக் கொன்று விடுவார்கள் என மிருகங்களைப் பார்த்து சொன்னால் அது எவ்வளவு அபத்தமாக இருக்குமோ அதனை விட இந்தியாவின் இந்த போலிக் கவலை அபத்தமானதாக அமைகின்றது.

நாம் இப்படிக் குறிப்பிடுவது ஸ்ரீலங்காப்படைகளின் இனப்படுகொலைகள் புரியம் தன்மைகளை நிராகரிப்பதற் கல்ல. ஆனால் கடந்த காலங்களில் ஸ்ரீலங்காப்படைகள் செய்த இன அழிப்பினையே மிஞ்சக்கூடிய வகையில் இனப் படுகொலை செய்து வருவதுடன் தமிழ்க் கைக்கூலிகளை வளர்த்து அதன் மூலமும் இன அழிப்பில் ஈடுபட்டுவரும் இந்தியாவுக்கு ஸ்ரீலங்காப் படைகளின் இனப்படு கொலை களைப் பற்றிக் கதைக்க எவ்வித அருகதையுமில்லை என் பதனைச் சுட்டிக்காட்டவே இதனைக் குறிப்பிடுகிறோம். இந்தி யா வெளியேறிய பின் ஸ்ரீலங்காப் படைகள் இன அழிப்பில் ஈடுபடலாம் எனற அச்சத்திற்கும் எமது கடந்த கால அனுபவங்களே காரணமாக அமைகின்றன. இன்றைய நிலையில் இந்தியப்படைகளின் இன அழிப்பினையும், எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் செயற்பாட் டையும் தடுத்து நிறுத்த இந்தியப்படைகளை அரங்கில் இருந்து அகற்றுவததைத் தவிர வேறுவழியில்லை.

இந்தியா வெளியேறிய பின்னர், தமிழீழப் பிரதேசங் களில் ஸ்ரீலங்காப் படைகள் இன அழிப்பில் ஈடுபட முனையு மானால் அதனை எக்காரணம் கொண்டும் விடுதலைப்புலிகள் அனுமதிக்கப் போவதில்லை. ஒரு லட்சம் இந்தியப்படை களேயே எதிர்த்து யுத்தம் நடத்தி, போர் முனையில் உரம் பெற்று இருக்கும் விடுதலைப்புலிகளால் ஸ்ரீலங்கா படைகளை நிச்சயமாக எதிர் கொள்ள முடியும். மீண்டும் இன அழிப் பில் ஸ்ரீலங்காப் படைகள் ஈடுபடுமானால் அது தமிழீழப் பாதையில் நாம் வீறுகொண்டு முன்னேற வழிசமைக்கும்.

கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா இராணுவம் தமிழ்பேசும் மக்களுக்கெதிரான இனப்படுகொலைகளைச் செய்தபோது இருந்த நிலைமைகளை விட இன்றைய நிலைமைகளில் மாற்றங் கள் உள்ளன. இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு முறை சாத்தியமற்றது என்பதனை அனைவரும் நன்கு புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு இராணுவ அணுகு முறை இன்று தோல்விகளைச் சந்தித்துள்ளது. இராணுவ அடக்குமுறைகளை ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளுமானால் சர்வதேச ரீதியில் அந்நியப்பட்டுப் போகவேண்டிய நிலைமைகளும் உருவா கும்.

மேலும், இன்று தென்னிலங்கையில் ஆயுதப்போராட் டம் தீவிரமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இந்த ஆயு தப் போராட்டத்தை எதிர் கொள்ள பெரும் எண்ணிக்கை யான ஸ்ரீலங்காத்துருப்பினர் தென்னிலங்கையில் குவிக்கப் பட்டுள்ளனர். இத்தகைய சூழ்நிலையில், இராணுவத் தீர்வு முறையின் அடிப்படையில் இன அழிப்பில் ஈடுபட முயன் றாலும், அதனை முன்னைப்போல தீவிரமாகச் செய்வதற்கு ரிய போதியளவு இராணுவ பலம் ஸ்ரீலங்கா அரசிடம் இல்லை. ஏறத்தாள மொத்தம் 60,000 துருப்புக்களைக் கொண்ட ஸ்ரீலங்கா அரசால் நாட்டின் முழுப்பகுதியிலும் (தென்னிலங்கையில் மக்கள் விடுதலை முன்னனி; வடக்கு-கிழக்குப் பகுதியில் விடுதலைப்புலீகள்) நடைபெறும் போராட்டத்தை எதிர்கொள்வது கடினமானதே. அவ்வாறு இராணுவத்தை ஈடுபடவைத்தாலும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளில் முன்னனற் போன்று தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற் கான சாத்தியங்கள் குறைவாகவே உள்ளன. எது எவ்வாறு இருந்த போதிலும் ஸ்ரீலங்காப்படைகள் இன அழிப்பினை மேற்கொள்ள முனையுமானல், அதனை எதிர்த்து தற்காப்பு யுத்தத்தினை நடத்தக் கூடிய ஒரு போராட்டச் சக்தியாகவே விடுதலைப்புலிகள் உள்ளனர்.

முதலையின் வாயினுள் அகப்பட்டிருக்கும் ஒருவன் தான் முதலையின் பிடியில் இருந்து விடுபட்டு வெளியேறினல், ஆற்றங்கரையின் காடுகளிலுள்ள மிருகங்கள் சில வேளை களில் தாக்கலாம் என்பதற்காக முதலையின் பிடியில் இருந்து விடுபடுவது குறித்து தயங்குவது எவ்வளவுதூரம் அர்த்த மற்றதோ அதைப்போலத் தான் இந்திய ஒடுக்குமுறைகளில் இருந்து விடுபடுவதற்கு, ஸ்ரீலங்கா படைகளின் ஒடுக்கு முறை குறித்து அஞ்சுவதும் அமைகின்றது.

தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து இந்தியப்படைகள் வெளியேறினல் எமது தேசிய விடுதலைப் போராட்டத்துக் கான தடைக்கல் அகற்றப்படும். இந்தியப்படைகள் வெளி யேறிய பின் தமிழ்பேசும் மக்களின் அபிலாசைகளை நிறை வேற்றுமல் மீண்டும் இன அழிப்பு நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளுமானல், தமிழீழம் தவிர்த்த வேறு எந்தத் தீர்வுமுறை மூலமும் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்ற விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டின் நியாயத்தன்மை சர்வதேச அரங்கில் உணர்த்தப்படும்.

தமிழீழ இலட்சியத்திற்காக ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளைக் களப்பலி கொடுத்த விடுதலைப்புலிகள், பெரும் ஆட்சி அதிகாரங்களுக்காக மக்களையும், உரிமை களையும் விலைபேச மாட்டார்கள். இதனை அவர்களின் கடந்த கால வரலாறு காட்டி நிற்கின்றது. பதவிகளை அடை வதனையோ அல்லது சலுகைகளைப் பெறுவதனையோ நோக் கமாக விடுதலைப்புலிகள் கொண்டிருந்தால் இந்திய அரசி னையும் ஆளும் வர்க்கத்தினையும் எஜமானர்களாக ஏற்று இலகுவாக ஆட்சி பீடம் ஏறியிருக்க முடியும். எத்தனையோ சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கி ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இந்தியப்படைகளை எதிர்த்து யுத்தம் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. மக்களின் உரிமை விட யத்தில் எந்தவித விட்டுக் கொடுப்புகளுக்கும் இடம் இல்லை என்பதில் விடுதலைப்புலிகள் உறுதியாக இருக்கின்றார்கள்.

எனவே, இன்றைய விடுதலைப்புலிகள் - ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை குறித்து சந்தேகமும் குழப்பமும் அடையாது, எமது போராட்டத்தினை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தி வரலாற்றை முன்னேற்றவதற்கு தேவையான பொருத்தமான ஒரு இராஜதந்திர நகர்வாக இப்பேச்சுவார்த் தையினை நோக்குவோம்.

## நாங்கள் பனைமரங்கள்

நாங்கள் பனைமரங்கள்
நிமிர்ந்து நிற்கின்ற நெட்டை பனைமரங்கள்
கொட்டும் மழை
குமுறும் கடலலை
சுட்டெரிக்கும் சூரியப்பார்வை
திக்குகள் திடுக்கிடும்
மின்னல் இடிமுழக்கம்
மேக கதிர் வீச்சு
என்ன செய்யும் எங்களை
எங்கள் வீழ்ச்சி மரணமல்ல
இனொரு பயணின் ஆரம்பம் !

தமிழீழத்தின் செய்திகளுக்கு
"விடுதலைப்புலிகளின் குரல்"

07. 840225
07. 402154
(24 மணிநேரமும்).

www.padippakam.com

## பிரபாகரன் "படுகொலை"!

# கொலை செய்தது யார்?

விடுதலைப்புலித் தளபதி பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி தமிழ்நாட்டையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டது!

"ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்ல வேண்டும்" என்பார்கள்! அதன்படி, "தளபதி பிரபாகரனுக்கும் துணைத் தளபதி மாத்தையாவுக்கும் சண்டை வந்தது; அந்த சண்டையில் பிரபாகரன் கொல்லப்பட்டார். பிரபாகரனுக்கு உதவியாக



கிட்டு

வநத கிட்டுவும் கொல்லப்பட்டார்!" என்று, காது மூக்கு வைத்து கதை பரப்பப்பட்டது!

பிரபாகரனின் பிணம் பொதுமக்கள் அஞ்சலி செலுத்த அனந்த பெரியகுளம் என்ற இடத்தில் வைக்கப்பட்டு இருக்கிறது என்றுகூட அந்த அரிச்சந்திரர்கள் கூறினார்கள்!!

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள்! ஆனால், இவர்களின் புளுகு நாலுநாள் கூட நிற்கவில்லை! பிரபாகரன் கொல்லப்பட்டார் என்பதற்கு இன்னும் ஆதாரம் கிடைக்கவில்லை என்று, "கொலை"யைப் பரப்பியவர்களே மறுக்க வேண்டியதாகிவிட்டது!!

### யார் செய்தது?

இந்தக் "கொலை"யைச் செய்தது யார்? ஏன் செய்தார்கள்?

பிரபாகரன் கொல்லப்பட்டார் என்று செய்தி வெளிவருவது இது முதல்முறை அல்ல. இந்தியப் படையே கூட பலமுறை பிரபாகரனை "கொலை" செய்திருக்கிறது! ஏன், "குண்டுவீச்சில் மாத்தையா கொல்லப்பட்டார்" என்றுகூட இந்தியப் படை அறிவித்ததே!

ஆஸ்திரேலியா நாட்டில் உள்ள ஒரு வானொலி, ஜூலை 16-ந்தேதி, "பிரபாகரன் கொல்லப்பட்டார்" என்று ஒரு செய்தியை ஒலிபரப்பியது. வழக்கமாக நடக்கும் "கொலை"தான், அது! ஆனால், டெல்லி சர்க்கார் வரிந்து கட்டிக்கொண்டு, "பிரபாகரன் கொல்லப்படவில்லை" என்று அறிக்கை வெளியிட்டது!

"டெல்லி சர்க்கார் ஏன் அப்படி அறிக்கை வெளியிட வேண்டும் என்று கேட்கிறீர்களா? "பிரபாகரன் தான் செத்துவிட்டாரே! இந்தியப்படை வெளியேற வேண்டியதுதானே" என்று யாரும் சொல்லிவிடக் கூடாதே! அதற்காகத்தான்!

### "கொலை" செய்தார்கள்!

ஆனால், அதே டெல்லி சர்க்கார்தான் ஜூலை 23-ந் தேதி "பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டார்" என்ற செய்தியை பரபரப்பாக வெளியிட்டது!

அப்பொழுது அப்படி மறுத்துவிட்டு, இப்பொழுது இப்படி அறிவித்தது ஏன்?



துணைத் தளபதி மாத்தையாவுடன் பிரபாகரன்

அன்றைக்கு வெளிவந்த செய்தித்தாள்களை எடுத்துப் பாருங்கள். அன்று ஒரு முக்கியமான செய்தி வெளிவந்திருக்கும். என்ன செய்தி?

"நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலக 12 எதிர்க்கட்சிகள் கூட்டாக முடிவு" என்பதுதான் அந்த செய்தி!

இந்தச் செய்தியை திசை திருப்ப வேண்டும்; மக்களின் கவனத்தில் இருந்து மறைக்க வேண்டும்; இதைப்பற்றி மக்கள் பேசக் கூடாது; வேறு எதைப்பற்றியாவது மக்கள் பேசும்படிச் செய்ய வேண்டும்; அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள். "பிரபாகரன் கொலை" என்ற குண்டைத் தூக்கிப் போட்டார்கள்! பாவம், பிரபாகரன் அகப்பட்டார். அவரை "கொலை" செய்துவிட்டார்கள்!

### கேப்பையில் நெய்!

பிரபாகரனுக்கும், மாத்தையாவுக்கும் சண்டை நடந்ததை நேரில் பார்த்தது போலக் கதைவிட்டார்கள்! கடைசியில், "பிரபாகரனின் உடல் வவுனியாவை அடுத்த அனந்த பெரிய குளம் என்ற இடத்தில் வைக்கப்பட்டு இருப்பதாக சொல்லப்படுகிறது" என்று முடித்தார்கள்.

"கேப்பையில் நெய் ஒழுகிறது என்றால், கேட்பவர்களுக்குமா மதி இருக்காது" என்பதை மறந்துவிட்டார்கள். ஈழத்தில் 40 ஆயிரம் இந்தியப்படை இருக்கிறது. அங்கு இந்திய வீரர்களின் காலடி படாத இடமே கிடையாது. இந்தியாவின் கைப்பாவையான வரதராசப் பெருமாள்தான் அங்கே முதலமைச்சர். அவருக்கு என்று தனியே ஒரு படை இருக்கிறது. வவுனியாவில் மட்டுமே ஆயிரத்துக்கு மேற்பட்ட இந்திய வீரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பத்துப்பேர் அனந்த பெரியகுளத்துக்குப் போய்ப் பார்த்துவிட்டு வர எவ்வளவு நேரம் ஆகும்?

ஈழத் தமிழர் அத்தனை பேரும் இந்தியப் படையை ஆதரிக்கிறார்கள் என்று நாள்தோறும் தொலைக் காட்சியில் (டி.வி.) காட்டுகிறார்கள். பிரபாகரனின் உடலை படம் எடுத்துக் காட்ட முடியாதா?

### புலிகள் கொன்றார்கள்!

டெல்லி சர்க்கார் ஒரு விளக்கம் சொல்லுகிறது. "அமிர்தலிங்கம் கொல்லப்பட்ட செய்தியை அமுக்க, பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியை விடுதலைப் புலிகளே பரப்பினார்கள்" என்பதுதான் அந்த விளக்கம்!

■

ராணி 6-8-89

# "இந்தியப்படையே வெளியேறு!"




அமைதியை ஏற்படுத்த என்று அனுப்பப்பட்டு இன்று அமளியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இந்தியப்படை தமிழீழத்தை விட்டு வெளியேறவேண்டும் என்று ஈழத் தமிழ் மக்கள் நீண்டகாலமாகவே குரல் கொடுத்து வருகின்றனர்.

இன்று அந்தக் கோரிக்கைக்கு ஆதரவாகத் தமிழீழத்துக்கு வெளியே சிங்கள மக்களும் குரல் கொடுத்து வருகின்றனர்.

"இந்தியப்படையின் செயல் நியாயமற்றது', உடனடியாகத் தமிழ்ப்பகுதியை விட்டு வெளியேறவேண்டும்" என்று உலக அரங்கிலிருந்து பத்திரிகையாளர்களும், அறிஞர்களும் கூடக் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளனர்.

**அமைதிப்படை இலங்கையில் இருப்பதை இந்திய மக்கள்கூட விரும்பவில்லை**

சென்னைத் துறைமுகத்தில்- ஏப்ரல் 27-இல் இரண்டு இந்திய அமைதிப்படைப் பிரிவுகளைச் சிறீலங்காவின் திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து ஏற்றிவந்த கப்பல் கரை தட்டியது. சிறீலங்காவுக்கு முதன்முதலாக அனுப்பப்பட்ட 1-வது பரா துருப்புக்களே கப்பலிலிருந்து முதல் பிரிவாக இறங்கினார்கள். நிலக் கண்ணிகள் - பொறிகள் நிரம்பிய வவுனியாக் காடுகளில் 22 கொடுமையான மாதங்களைக் கழித்துவிட்டு இவர்கள் திரும்புகிறார்கள். மேளதாளங்கள் - வாத்தியங்கள் இல்லாமலே திரும்பி வருகிறார்கள்.

கட்டிடங்கள் - பாரம்தூக்கிகளின் நிழலில் கூட்டம் கூட்டமாக ஜவான்கள் உட்கார்ந்திருந்தார்கள். மரணத்தையும் - காயங்களையும் - விதவைகளையுமே தந்த - வெற்றிபெற முடியாத ஒரு போரிலிருந்து திரும்பியதால் அவர்கள் களைத்துப் போய் இருந்தார்கள்.

வெற்றி வீரர்களாக அல்ல - களைத்துப்போன ஒரு கூட்டமாகவே அவர்களைக் காண முடிந்தது.

48,000 துருப்புக்களும் - ஹெலிகொப்டர்களும் போர் விமானங்களும் - கிழக்குக் கடற்படைப் பிரிவும் இப்போரில் ஈடுபட்டும் தமிழர்களின் மாநிலமான வடகிழக்குப் பகுதியை இந்திய அமைதிப்படையின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் திருப்திகரமான முறையில் கொண்டுவர இயலவில்லை. சிறீலங்கா தமிழர்களின் துரோகத்தனமான அரசியலும் - ஈரலிப்பான காடுகளும் - அடக்கமுடியாத விடுதலைப் புலிகளின் எதிர்ப்பும் - இந்தியாவின் சிறீலங்கா மீதான கொள்கையின் பிழையான கணிப்பும் - இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து இந்திய அமைதிப்படையைச் சங்கடமான நிலைமைக்குள் தள்ளிவிட்டன என்றே சொல்லவேண்டும். தமிழர்களைக் காப்பாற்ற அனுப்பப்பட்ட இப்படை தமிழர்களின் பேராதரவுள்ள கெரில்லாக்களுடன் மோதவேண்டியதாயிற்று.

"இன்று இலங்கை அரசும் எங்களை வேண்டாம் என்று கூறுகிறது. இலங்கை மக்களின் பெரும்பான்மையானவர்களும் எங்களுக்கு எதிராகவே உள்ளனர். ஏன் நமது சொந்த இந்திய மக்களே நாங்கள் சிறீலங்காவில் இருப்பதை விரும்பவில்லை. பின் எதற்காக நாங்கள் அங்கே இருக்கவேண்டும்?" என்று சிறீலங்காவில் இருந்து நாடு திரும்பியுள்ள ஒரு இந்தியப்படை மேஜர் கூறினார்.

எல்.ரி.ரி.ஈ. கெரில்லாக்களால் அன்றாடம் இந்தியப்படை வீரர்கள் கொல்லப்படுவதாக வரும் செய்திகளும் - இராணுவ மருத்துவ நிலையங்களுக்கு காயமடைந்த இந்தியப்படை வீரர்கள் அடிக்கடி கொண்டு வரப்படுவதும் இந்திய அரசுக்கு இக்களத்தில் ஏற்பட்டுள்ள வெற்றியை அல்ல - இராணுவத் தோல்வியையே காட்டுகிறது.

வவுனியா காடுகளில் அண்மையில் நடந்த பல சண்டைகளும்- ஏனைய நகர்ப்புறங்களில் விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்ட மரணக் கிடங்குகளின் விளைவுகளும் - அமெரிக்கப் படைகளுக்கு வியட்நாம் ஏற்படுத்திய அச்சத்தை விடக் கூடிய அச்சத்தையே இந்திய அமைதிப்படைக்கு விளைவித்துள்ளன.

INDRANIL BANERJIE
Sunday 14—20 May 1989

**விடுதலைப் புலிகளின் பலமும் ஆற்றலும் அதிகரித்துள்ளன**

'புலிகளின் முதுகெலும்பை உடைத்துவிட்டோம்' என்று இந்திய அமைதிப்படை அடிக்கடி சொல்லிவருகிறது. ஆனால் இது முழு அளவில் உண்மை அல்ல. பிரபாகரன் இந்தியப் படைகளினால் பிடிக்கப்பட முடியாதவராக நழுவிக் கொண்டே இருக்கிறார். விடுதலைப் புலிகளிடம் படை வீரர் பற்றாக்குறையும் இல்லை. அதுமட்டுமல்ல தாக்குகின்ற - அழிக்கின்ற ஆற்றலும் முன்பிருந்ததைவிட அவர்களிடம் இப்போது கூடியே இருக்கிறது.

DILIP BOBB
INDIA TODAY
May 15 1989

# இவ்வளவு காலமும் எங்கே பதுங்கி இருந்தாய்?

www.padippakam.com




(இந்தியப்படைகளின் கால்களை கட்டிப்பிடித்துக் கொண்டு, தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக அறிக்கைகளை தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டு உல்லாச வாழ்வு வாழ்ந்த தலைவர் அமிர்தலிங்கத்தின் உடல் தமிழீழத்துக்கு கொண்டு வரப்பட்ட போது மாணவர் அமைப்புகள், மக்கள் அமைப்புகள் என்பன வெளியிட்ட துண்டுப்பிரசுரங்களில் ஒன்று.....)

தமிழீழ மக்களின்
வீடுகளை எரித்த
பெண்களை கற்பழித்த
இளைஞர்களை கொன்ற
இந்திய வெறிப்படைக்கு
வக்காலத்து வாங்கிய
அமிர்தலிங்கமே !
உனக்கு
எங்கள் மண்ணில்
எக்காலத்திலும்
அஞ்சலி இல்லை

— . . —

அமிர்தலிங்கமே!
யாழ் மக்கள்
பிணமான போது
நீ வரவில்லை.
நீ பிணமான போது
வருகின்றாய்.
மக்கள் வருவார்களா ?....

நாங்கள் செத்தபோது
எங்கள் வீட்டுக்கு
நீ வரவில்லை
நீ செத்தபோது
நாங்கள்
வருவோமா ?

எம்மைக்கொன்றவனுக்கு
துணை நின்றவனுக்கு
அஞ்சலியா ?
இந்தியாவின் கைக்கூலி
அமிர்தலிங்கத்துக்கு
இரங்கலா ?

— . . —

அமிர்தலிங்கமே
மக்களால்
தூக்கியெறியப்பட்டு
இந்தியாவால்
பதவியில் வைக்கப்பட்ட
உன் மரணம்
கேவலமானது

அமிர்தலிங்கமே!
உனக்காக
அழ முயற்சிக்கிறேன்
முடியவில்லை

— . . —

அமிர்தலிங்கமே!
நீ
எரிக்கப்படும் சுடுகாட்டை
இப்போது பார்
எம்
விடுதலைக்காக போராடியவர்கள்
புதை குழிக்குள்
எத்தனை! எத்தனை!

— . . —

களத்தில்
விடுதலைப்புலிகள்
முந்திய போது
கதிரைக்கு முந்திய
அமிர்தலிங்கத்திற்கு
கண்ணீரா ?
தமிழ்ப்பெண்களை
கற்பழித்த
இந்தியப்படை
வெறியரை
தாங்கிய
அமிர்தலிங்கத்திற்கு
தாய்க்குலம்
கண்ணீர் வடிக்காது.

அமிர்தலிங்கமே !
ஊருக்கு
உழைத்த
* கருணாநந்தசிவத்திற்கு
நீ
அஞ்சலி செலுத்தவில்லை
உனக்கு
நாங்கள்
அஞ்சலி செலுத்துவதா ?...
தமிழீழத்தின்
கண்ணீர்
தியாகிகளுக்காக
சிந்தப்படுவது!
துரோகிகளுக்காக அல்ல -
இப்போதுதான்
யாழ்பாணம்
வருகின்றாயா ?...
இத்தனை காலம்
எங்கே இருந்தாய் ?....
தமிழீழத்திற்காய்
ஆயிரம் விடுதலைப்புலிகள்
பிணமாய் போனார்களே
ஒரு புலிக்காவது
நீ
அஞ்சலி செலுத்தினாயா ?
செருக்களத்தில் நின்ற
விடுதலைப் புலிகளுக்கு
அஞ்சலியா ?
செல்லையில் ஒழிந்த
அமிர்தலிங்கத்திற்கு
அஞ்சலியா ?

* கருணாநந்தசிவம்
ஓர் ஆசிரியர் மக்கள் மத்தியில்
செயலாற்றினார் அதனால் EPRLF
பயங்கரவாதிகளால் சுட்டு
கொல்லப்பட்டார்.

www.padippakam.com

# துரோகக்குழுக்களுக்கு இறுதி சந்தர்ப்பம் !

தமிழீழம்,
11.5.1989.

**சரணடைந்த தொண்டர்படையினரும் மற்றைய இயக்கத்தினரும் விடுதலை செய்யப்பட்டனர்.**

அண்மையில் நெடுங்கேணிப்பகுதியில் 8 ரெலோ இயக்கத்தினரும், 4 தொண்டர் படையினரும், உட்பட 12 பேர் எம்மிடம் சரணடைந்து விட்டனர். சில நாட்களின் பின் அவர்கள் அனைவரும், தமது சொந்த வாழ்க்கையில் ஈடுபடுவதற்காக விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பணத்திற்காகவோ அல்லது அறியாமையினாலோ, தொண்டர்படையிலும், சமூக விரோத இயக்கங்களிலும், சேர்ந்து கொண்ட இளைஞர்களே!

நீங்கள் தமிழ் சமூகத்தின் பழிச்சொல்லைக் கேட்டுக்கொண்டு தொடர்ந்தும் இந்திய இராணுவத்துடன் சேர்ந்து கொண்டு, சமூக விரோத செயல்களில் ஈடுபடாது உங்களுடைய ஆயுதங்களுடன், வந்து விடுதலைப் புலிகளிடம் சரணடையுங்கள்.

உங்களுக்கு பூரண பாதுகாப்பு வழங்கப்படும்
எதிர் காலமும் உறுதி செய்யப்படும்.

**உள்ளூர் தலைவர்கள் ஓட்டம்.**

இந்திய இராணுவத்தின் வெளியேற்றம் தொடர்பாக பத்திரிகையில் செய்திகள் வெளிவரத் தொடங்கிய பின் ஈ.பி.ஆர்.எல்.எப். ரெலோ, புளொட், ஈ.என்.டி.எல்.எவ். ஆகிய இயக்கங்களில் இருந்த உள்ளூர் தலைவர்கள் வெளிநாடுகளுக்கு தப்பி ஓடுகின்றனர்.

இதை உணர்ந்து நீங்களும், புத்திசாதுரியமாக செயற்பட்டு விடுதலைப்புலிகளிடம் வந்து சேருவதன் மூலம் உங்களுடைய எதிர்காலத்தின் அமைதியான வாழ்க்கையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

அன்புள்ள தமிழ்ப் பெற்றோர்களே!

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, தொண்டர் படையிலும், மற்றைய இயக்கங்களிலும், உள்ள உங்களது, பிள்ளைகளை உடனடியாக கூட்டி வந்து, எம்மிடம் ஒப்படையுங்கள்.

ஆயுதங்களுடன் வந்து சரணடையும் இளைஞர்களுக்கு சன்மானம் வழங்கப்படுவதுடன், தகுந்த பாதுகாப்பும் வழங்கப்படும்.

புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்

அரசியற் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

சரணடையுங்கள் !!

சரணடைந்தால் மன்னிப்பு !
சரணடையாவிட்டால் கேவலமானசாவு !

www.padippakam.com

# சரணடையும் தொண்டர்படையினருக்கு பொது மன்னிப்பு

## விடுதலைப்புலிகள் அறிவிப்பு

E.P.R.L.F
E.N.D.L.F
T.E.L.O
P.L.O.T.E

## குழுக்களுக்கு இறுதி அறிவிப்பு

துரோகப் படைகளாலும், இந்திய ஆக்கிரமிப்புப் படைகளாலும் வலுக்கட்டாயமாக தொண்டர் படையில் சேர்க்கப்பட்டுள்ள இளைஞர்களும் நாட்டின் நிலைமைகளைப் புரிந்து கொள்ள முடியாமல் முன்யோசனை எதுவுமின்றி தொண்டர் படையில் இணைந்துள்ள இளைஞர்களும் ஆயுதங்களுடன் எம்மிடம் சரணடைந்தால் அவர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படும்.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னி பிரதேசத்திலிருந்து மாகாண சபையின் தொண்டர் படையைச் சேர்ந்த 17 இளைஞர்கள் எம்மிடம் சரணடைந்துள்ளார்கள். அவர்களுள் 7 பேர் ஆயுதங்களுடன் சரணடைந்தவர்களாவர். இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் 8 இளைஞர்கள் சரணடைந்துள்ளார்கள். அவர்களுள் 4 பேர் ஆயுதங்களுடன் சரணடைந்துள்ளார்கள். இவ்வாறு சரணடைந்தவர்களும், மேலும் சரணடைய இருப்பவர்களும் எமது இயக்கத்தால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு கட்டம் கட்டமாக விடுவிக்கப் படுவார்கள்.

நாட்டு நிலைமையைப் புரிந்து கொள்ள முடியாத, அல்லது பணத்திற்காக எதையுமே முன் யோசனை எதுவுமின்றி செய்யக்கூடிய இளைஞர்கள் பெரும்பாலானோர் தொண்டர் படைக்குச் சென்றுள்ளார்கள். அங்கு சென்ற பின்னர்தான் நாட்டு நிலைமை அவர்களால் தெரிந்து கொள்ள முடிகின்றது. வாக்கங்கள் போதனைவிட்டபடி, மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படும் என்றெல்லாம் சொல்லப்பட்டுத் தான் இவர்கள் தொண்டர் படைக்கு சேர்க்கப்பட்டார்கள். ஆனால் அங்கு சென்ற பின்னர்தான் தாங்கள் இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கும், துரோகக் கும்பல்களுக்கும் அடியாட்களாக வைக்கப்பட்டிருப்பதை உணரத் தொடங்கியுள்ளனர். பொது மக்களை அடித்தும், துன்புறுத்தியும், கொலை செய்தும், எமது தமிழ்ப் பெண்களை இந்திய உயர் அதிகாரிகளுக்கு கடத்திச்சென்று கொடுப்பதற்குமே இந்த தொண்டர்படை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உதாரணமாக 30.3.89 அன்று தர்மபுரம் என்ற (கிளிநொச்சி மாவட்டம்) இடத்தில் பாடசாலை மாணவி ஜீவராணி (17 வயது) என்பவர் அவரது வீட்டில் வைத்து கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இன்றுவரை அவருக்கு என்ன நடந்தது என்பது பற்றி தகவல் யாருக்கும் தெரியாது.

15.6.89 அன்று சோதனைக்காக நிறுத்தப்பட்ட பஸ் வண்டியிலிருந்து இரண்டு இளம் பெண்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு அவ்விருவரையும் பலாலி இந்திய இராணுவ முகாமில் கொண்டு சென்று இறக்கிவிடும்படி பஸ் வண்டியின் சாரதி பணிக்கப்பட்டிருந்தார். ஆனால் சாரதி அவ்வாறு செய்யாமல் இரு பெண்களையும் இராணுவத்தினரிடம் இருந்து காப்பாற்றும் பொருட்டு இடைவழியில் இறக்கிவிட்டு பாதுகாப்பாகச் செல்லும்படி கூறிச் சென்றுவிட்டார். இதை அறிந்த துரோகக் கும்பல் தொண்டர் படையினருடன் சாரதியின் வீடு தேடிச் சென்று சாரதியை சுட்டுக் கொன்றுள்ளனர்.

இந்திய இராணுவமும், மாகாண சபைப் பிரதிநிதிகளான ஐந்தாம் படையினரும் தாம் செய்யும் கொலை, கொள்ளைகளுக்கு துணைபோக உங்களை பயன்படுத்துகிறார்கள். தம்மை பாதுகாக்கும் பொருட்டு தாக்குதல் நடவடிக்கைகளுக்கு உங்களை முன்னால் அனுப்புகிறார்கள். நீங்கள் உங்கள் சகோதர சகோதரிகளை, பெற்றோர்களை கொலை செய்ய இந்திய இராணுவத்தாலும் ஐந்தாம் படைகளாலும் நிர்ப்பந்திக்கப் படுவீர்கள். மறுத்தால் தண்டிக்கப் படுவீர்கள்.

கடந்த இரண்டு மாதத்தில் 50க்கும் மேற்பட்ட தொண்டர் படையினர் இந்திய அரசின் நிர்ப்பந்தத்தால் எம்முடன் மோதி உயிரிழந்தனர். உண்மை நிலையை உணர்ந்த நீங்கள் ஆயுதங்களுடன் சரணடையுங்கள். உங்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும்.

— தமிழீழ விடுதலைப் புலிகள்

"இந்தியப்படை வெளியேறப் போவதால் இழப்பும் பீதியும் அடைந்துள்ள துரோக இயக்கங்களின் உள்ளூர் தலைவர்கள் வெளிநாடுகளுக்கு தப்பி ஓட தயாராகி உள்ளனர். தமிழீழத்தில் இந்த துரோககுழுக்களின் உறுப்பினர்கள் அனைவரின் பெயர்களும் விடுதலைப்புலிகளிடம் உள்ளன. இவர்களுக்கான தண்டனைகள் காலகாலத்தில் தவறாது முறையாக வழங்கப்படும்"

www.padippakam.com

தமிழீழதாயகமண்ணிலே ஆயுதங்களுடன் வலம் வரும் இந்தியநாய்களுக்கு............

# அந்நியப் படை வீரனே!



படை வீரனே!
இங்கு வரவேண்டும் என்று நீ யாரையும் கேட்கவில்லை
அது எங்களுக்குத் தெரியும்.

நீ ஆணைகளுக்கு அடிபணிகிறாய்
அது எங்களுக்குத் தெரியும்.

உனக்கு ஒரு மனைவி
ஒரு காதலி
ஒரு தாய் உண்டு
அது எங்களுக்குத் தெரியும்.
உனக்குக் குழந்தைகள் உண்டு
அதுவும் எங்களுக்குத் தெரியும்.

ஆனால் படை வீரனே!
எங்கு நீ நிற்கிறாயோ
அங்கே உனக்கு மரணம் நிச்சயம்.
எங்கு நீ நடக்கிறாயோ
அங்கே ஏற்படும் உனக்கொரு எரிகின்ற காயம்.
எங்கு நீ உறங்குகிறாயோ
அங்கு உனக்கு அமைதியே இல்லை.
ரத்தவெள்ளத் தீய கனவினூடே
விம்மித் தணிகிறது பூமி.
படை வீரனே!
நீ மடிந்தால்
நாய்கள்தான் உன்னைப் புதைக்கும்.

இந்த மண்ணிற்கு நீ வந்தபோது
புரிந்துகொள்ள வந்ததாகக் கூறினாய் நீ.
படை வீரனே, உனது புரிதல் எங்களுக்கு சலிப்பூட்டியிருக்கிறது,
தமிழீழ மண்ணிலே வெறியாட்டமாடும் இந்தியநாய்களே....
கதவுகளை நீங்கள் தட்டுவதும்
தலைகளில் இடிக்கும் துப்பாக்கிக் கட்டையும்
சிறைகளும் விஷவாயுவும்
இருண்ட மூலைகளில் எங்கள் மீது விழும் அடி உதைகளும்
எங்களுக்கு சலிப்பூட்டியிருக்கின்றன.

படை வீரனே!
தமிழீழமக்களின் மக்களின் எலும்புகளுக்கு
நீ கொண்டுவரும் சமாதானம்

எங்களுக்கு சலிப்பூட்டியிருக்கிறது.
எங்கள் இல்லங்களில் வெடிக்கும் குண்டுகள்
தெருக்களில் குவிந்துவரும் இடிபாடுகள்
நெடுங்கால நண்பர்களின் மரணங்கள்
கண்ணீர்கள், ஈமச்சடங்குகள்
முடிவேயில்லாத ஈமச்சடங்குகள்
எங்களுக்கு சலிப்பூட்டியுள்ளன.

படை வீரனே!
இந்த மண்ணிற்கு நீ வந்தபோது
புரிந்துகொள்ள வந்ததாகக் கூறினாய்.
இதுதானா உன் புரிதல்?

நாங்கள் இங்கு கனவு காண்கிறோம்.
இந்தப் பூமி எங்கள் பூமி எனக்
கனவு காண்கிறோம்.
சுதந்திரத்தின் உன்னதமான ஒளியிலே..
தமிழீழமக்கள் அனைவரும் ஒன்றுகூடி
ஒருநாள் இங்கு கூடி
சுபீட்சமாய், சுதந்திரமாய், மகிழ்வுடன் வாழ
கனவு காணமா.
மரணமே இல்லாத
பசுமையானதொரு பூமியை
இறங்கிவரும் ஒரு நிசப்தத்தை
சமாதானம் என்றொரு நிசப்தத்தை
நாங்கள் கனவு காண்கிறோம்.

இந்தக் கனவை நாங்கள் காண்பதற்கு
படை வீரனே!
நீ வேண்டியதில்லை.
அதுதான் எங்களது புரிதல்.

வீட்டுக்குப் போ படை வீரனே!
நீ இங்கிருப்பது
காற்றை நாசப்படுத்துகிறது.
உனது புன்முறுவல்
எங்களை அலங்கோலப்படுத்துகிறது.

வீட்டுக்குப் போ படை வீரனே!
உன்னைப் பிணமாக நாங்கள்
உன் வீட்டுக்கு அனுப்புவதற்கு முன்.


ஆங்கிலம் மூலம் : பேட்டிரிக் கால்வின்

தமிழில் : எஸ். வி. ராஜதுரை
(சிறிது மாற்றப்பட்டுள்ளது)

www.padippakam.com

# தமிழீழம் அன்னியனின் மேய்ச்சல் நிலமல்ல விடுதலையின் விளைநிலம்....

சுட்டு சுட்டுக் குரங்கின் பசிக்கு
கொடுத்து வந்த பூனைகளாய் இருந்து
எம் பசிக்கு எதுவுமில்லை என்ற போது
எமக்காக அப்பம் சுட அக்கறைப்பட்டோம்.
மேய்ச்சல் நிலங்களாகவே இருந்து
எமக்கு அலுத்துப் போச்சு - அதனால்
விளைநிலங்களாக ஆசைப்பட்டோம்.
விழித்துக் கொண்டு இருக்கும் போதே - எம்
விழிகள் பறிக்கப்படும் தருணத்தில்
கண்ணைக் கசக்கி விழித்துக் கொண்டோம்.
அருகருகாய் வளர்ந்த ஆசைகள்
வெட்டுண்டு வேரோடு சாய்கையில்
விதை கொண்டு எழுந்து நின்றோம்.
கற்பனையிலே காலங் கழித்து - அந்தக்
கற்பனைகள் மட்டுமே இனி எம்
நிரந்தரமிச்சங்களாய் ஆன போது
துப்பாக்கியை தோழமை ஆக்கும்
துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டோம்.



எம் நிரந்தர ரணங்களை நிரந்தரமாய்
குணமாக்க களிம்பு தடவும் காரியங்கள்
என்பதே எம் தோள் மேல் துப்பாக்கிகள்.
தம் அசிங்க அழுக்கை அமைதி மறைக்க
துரோகிகள் சூட்டிக் கொண்ட
அழகான பெயர்தான் 'பேச்சுவார்த்தை'.

www.padippakam.com

தன் பெருமைக்கே அவமானம் என
வெட்கித்தான் அந்த பேய்க்கூட்டம்
வார்த்தைகளும் 'சிக்கலுக்கும் பட்டியலுக்கும்'
உள்ளேயே புதையுண்டு போயின - அதை
வேட்டுக்களால் வெளிச்சத்துக்கு கொணரவே
எம் விரல்கள் இணைந்து கொண்டன.



துப்பாக்கிகளின் இசைகளோடு
பழுத்து மண்ணிலே மறவன் விழுவதும்
நனவு இன்னும் இருக்கும் வரை
எம் துப்பாக்கிகள் வேட்டுகளை
தீர்த்துக் கொண்டே இருக்கும்.

தற்காலிக பசிக்காக எலும்புத்துண்டை
கவ்விக் கொள்ளும் நரிகளல்ல நாம்.
தமிழீழமே தாயகமே எம்தாகம் என
துப்பாக்கியையும் மரணத்தையும் நேசிக்கும்
மறவர்கள் நாம்.
எம் உரிமைகளை நிர்ணயிக்க
அந்நியருக்கு உரிமைதரும்
தெருவையும்பற்ற கோடரிகளல்ல நாம்.
எம் தோளின் மேல் துப்பாக்கி
சிலுவையாய் நெருடுமென்று கனவு காணும்
கூலிப்படைக்கு மரண ஓலை எழுதப் போவது - எம்
கரங்களிலிருந்து உருவிய துப்பாக்கியை தாங்கும்
புதியபுலியின் கரம் இன்று-
எம் துப்பாக்கிகள் வெறும் தோல் பட்டிகளில் தொங்குவதல்ல.
அவை எம் தேசத்தின் மானத்தில் தொங்குகின்றன

(நன்றி : உணர்வு)



www.padippakam.com

இலங்கை ஜனாதிபதி

# பிரேமதாசாவுடன் புலிகள் பேச்சு ஏன்?

## மத்திய மேல்சபையில் கோபால்சாமி விளக்கம்!

நன்றி: தினகரன்



கோபால்சாமி

**புதுடெல்லி, மே. 7- போர் நிறுத்தம் செய்யாது தொடர்ந்து இந்திய ராணுவம் தாக்கியதால் பிரேமதாசாவுடன் விடுதலைப் புலிகள் பேச்சு நடத்தினர். இதற்கு ராஜீவே காரணம் என்று மத்திய மேல்சபையில் கோபால்சாமி கூறினார்.**

இந்திய வெளியுறவு மந்திரி நரசிம்மராவின் இலாகா செயல்படும் நிலை குறித்த விவாதத்தில் தி.மு.கழக உறுப்பினர் வை.கோபால்சாமி பேசியதாவது:-

### வெற்று கோஷம்

அரசாங்கத்தின் லகான்களை ராஜீவ்காந்தி கையிலெடுத்துக் கொண்ட நாளிலிருந்து இந்தியா பின்பற்றுகின்ற வெளிநாட்டுக் கொள்கையை. முறையாக ஆராய்ந்து சரியான மதிப்பீடு செய்வோமானால் வெற்று கோஷங்கள் அடங்கிய ஆரவாரமான பிரகடனங்கள் தவிர பாராட்டத்தக்க சாதனை எதுவும் நடந்துவிடவில்லை. நிலைமை தெரியாமல் புதிய விவகாரங்களிலும், தலையிடத்தேவையில்லாத அந்நியப் பிரதேசங்களிலும் இந்தியா தனது மூக்கை நீட்டுவதும் அதன்பின் தனது பெருமை பங்கப்பட்டு சிக்கித் தவிப்பதும் சிறிது காலமாக வாடிக்கையாகப் போயிற்று.

### வானளாவ பேச்சு

மத குருமாரர்களின் மலைப். பிரசங்கங்களைப் போல இந்தியா அத்தகைய பிரச்சினைகளில் உபதேச மொழிகளை வாரி, வழங்கிக் கொண்டிருக்கிறது. டெல்லிப்பிரகடனத்தைப் பற்றி நட்வர்சிங் வானளாவப் பேசினார். குடியரசுத் தலைவர் உரையில் இதுபற்றிக் குறிப்பிடுகையில் "புதிய சகாப்தத்தின் வைகறையின் வரவைக் குறிக்கும் வகையில் சோவியத் யூனியன் டெல்லிப் பிரகடனத்தின் மூலமாக அணி சேராக்கொள்கையைத் தேர்ந்தெடுத்துள்ளது. அணு. ஆயுதங்களை ஒழிக்கும் பாதையில் சோவியத் ரஷியா அமெரிக்காவோடு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது." என இந்தியா பெருமைப்பட்டுக் கொள்கிறது.

### டெல்லி பிரகடனம்

இந்தக் கூற்று கிரெம்ளினையும், வெள்ளை மாளிகையையும் இண்டல் செய்வதாகும் சோவியத் அதிபர் கோர்பசேவும், அமெரிக்க அதிபர் ரீகனும் அவர்களின் உச்ச மாநாட்டுக்கு யோசனை கேட்பதற்காக இந்தியப் பிரதமர் அலுவலகமும், வெளி விவகார அமைச்சர் அலுவலகமும் அமைந்துள்ள சௌத் பிளாக்கின் (South block) வராண்டாவில் வந்து காத்திருந்து இந்தியாவின் அறிவுரைகளைப் பெற்றுச் சென்றார்கள் போலும். பூமி சுழல்வதே எங்கள் டெல்லிப் பிரகடனத்தால்தான் என்று தம்பட்டம், அடித்துக்கொள்வதைப்போலத் தோன்றுகிறது.

வெளி விவகார ராஜாங்க அமைச்சர் நட்வர்சிங் இந்த விவகாரத்தில் இடைமறித்து உரையாற்றுகையில்.

உலகத்தின் எல்லா மூலைகளிலும் உள்ள நாடுகளோடு இந்தியாவுக்குள்ள உறவை வர்ணித்தார். மேற்கத்திய வல்லரசுகளைப் பற்றியும். கிழக்கு ஐரோப்பிய நாடுகளைக் குறித்தும், ஆப்பிரிக்கக் கண்டத்தின் பிரச்சினைகள் குறித்தும் விளக்கங்கள் தந்தார். ஒரு தேசத்தின் வெளி விவகாரக் கொள்கையின் வெற்றியை அந்நாட்டின் எல்லைகளை அடுத்துள்ள அண்டை நாடுகளோடு ஏற்படுகின்ற உறவைப் பொறுத்தே நிர்ணயிக்க முடியும். அண்டை நாடுகளோடு இந்தியாவுக்கு நேச உறவு நீடிக்கிறதா? நட்பு நிலவுகிறதா? நல்லுறவு நீடிக்கிறதா? பக்கத்து நாடான நேபாளத்தோடு இந்தியாவின் உறவு சீர்கெட்டிருக்கிறதே என்ன காரணம்?

### வெறுப்புணர்ச்சி

இரு நாடுகளுக்கிடையில் பரஸ்பரக் குற்றச்சாட்டுகள், அவநம்பிக்கை, கசப்பு வளர்ந்துள்ளன. இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் நேபாளம், மதத்தால் கலாச்சாரத்தால், வரலாற்று மரபுகளால் நீண்ட நெடுங்காலமாக நெருக்கமான தொடர்பு கொண்ட நாடாகும். ஆனால் இன்று இரு நாடுகளுக்கிடையில் வெறுப்புணர்ச்சி தலைதூக்குவதைத் தவிர்க்க வேண்டிய கடமை பெரிய நாடான இந்தியாவுக்கு உண்டு. நேபாளத்தில் வாழும் இந்தியர்கள் தங்களின் உரிமைகளை

இழந்து தவிப்பதாகவும், பல இடங்களில் அத்தியாவசியப் பண்டங்கள் கூடக் கிடைக்காமல் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இந்தியர்களை வெளியேற்றும் மனப்பான்மை தலை தூக்கியிருப்பதாகவும் பத்திரிகைச் செய்திகள் குறிப்பிடுகின்றன. ஆனால் அதே நேரத்தில் "நான்தான் பெரியவன் எனக்கு நீ அடங்கிப்போக வேண்டும்." என்ற போக்கினை கடைப்பிடிப்பதாக நேபாளத்தில் அபிப்ராயம் பலமாக வளர்ந்து வருகிறது. இது தவிர்க்கப்படவேண்டும்.

## மிரட்ட நினைத்தால்

நேபாளத்தின் முன்னாள் பிரதமர் கொய்ராலா மிகுந்த வேதனையோடு "1921 ஆகஸ்ட் 1-ம் தேதியிலிருந்து நான் கதரணிந்து வருகிறேன். ஆனால் இன்றோ கதர் அந்நியத் துணியாகிவிட்டது. இனி கள்ளக்கடத்தலில் கொண்டு வரப்பட்டுத்தான் இக்கதரை நான் அணிய வேண்டும் போலும். சீன தேசம் எங்கள் தலைக்கு மேல் இருக்கிறது. அவர்களுக்கு உரிய மரியாதை நாங்கள் தர வேண்டும். இந்தியா இதனை ஏன் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தியா எங்களை மிரட்ட நினைத்தால் நேபாளம் தன்னுடைய எதிர்ப்புணர்ச்சியையும் காட்டத்தானே செய்யும்" என்று தெரிவித்திருக்கிறார்.

## நன்மை என்ன?

1950-ல் பண்டிதநேரு. நேபாள மன்னரோடு செய்து கொண்ட ஒப்பந்தம் தொடர்ந்து நீடிக்க இந்திய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அண்டை நாடாகிய சீன தேசத்தோடு நமது உறவு எந்த நிலையிலுள்ளது? இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி சீன தேசத்திற்கு விஜயம் செய்தது குறித்து நட்வர்சிங் வானளாவப் புகழ்ந்தார். இந்த விஜயத்தால் இந்தியாவுக்குக் கிடைத்த புதிய நன்மை என்ன? இந்தியப் பிரதமரும், சீன அதிபரும் சில விருந்துகளைப் பரிமாறிக் கொண்டதைத் தவிர கிடைத்த பலனென்ன? 1962-ல் சீனம் படையெடுத்த போது பல்லாயிரக்கணக்கான சதுர மைல்களைப் பறிகொடுத்தோம். இழந்த பிரேதேசத்தின் ஒரு அங்குல மண்ணையாவது திரும்பப் பெற வாய்ப்பிருக்கிறதா? இல்லை. இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இம்மியளவு முன்னேற்றமும் ஏற்படவில்லை.

## வங்க தேசம்

வங்கதேசத்தோடு எல்லைத் தகராறு தீர்ந்திருக்கிறதா? இல்லை. விசுவரூபம் எடுத்து விட்ட இலங்கை பிரச்சினையில் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை பயங்கரமான தவறுகள் கொண்டதாகவும், இலங்கைத் தீவில் அமைதியும், சகஜ நிலையும் திரும்புவதற்கு விடுதலைப்புலிகளோடும், மற்றவர்களோடும் இந்தியா பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்றும் அதுவே நிரந்தரமான மார்க்கமென்றும் ஆணித்தரமாக நாங்கள் வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

## தமிழர்கள் பலி

இந்தியா பேச்சுவார்த்தை நடத்த முன் வரவில்லை. துப்பாக்கித் தத்துவத்தையே தொடர்ந்தீர்கள். உங்கள் வெளிநாட்டுக் கொள்கையால் எத்தனை தமிழர்கள் உயிரிழந்திருக்கிறார்கள்? உங்கள் இரக்க மற்ற அயல்நாட்டுக் கொள்கையால் எண்ணற்ற விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர். ஏராளமான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர். அதே நேரத்தில் உங்களின் தவறான கொள்கையால் எத்தனை இந்தியச் சிப்பாய்கள் பலியாகியுள்ளனர்? அதிகாரபூர்வமாக உங்கள் தகவலின்படி 863 இந்திய சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும், 2500 பேர் படுகாயமுற்றதாகவும் அறிகிறோம்.

## அதிகம்

பலியான இந்தியத் துருப்புகளின் எண்ணிக்கை மிகவும் அதிகம். பாகிஸ்தானோடு நடைபெற்ற இரண்டு யுத்தங்களிலும், சீனப் போரிலும் இந்தியத் தரப்புக்கு ஏற்பட்ட உயிர்ச் சேதத்தைவிட ஈழத்தில் இறந்த இந்தியர் சிப்பாய்களின் எண்ணிக்கை அதிகம்.

நஜ்மாஹெப்துல்லா:- சீக்கிரத்தில் பேச்சை முடியுங்கள் நேரம் இல்லை.

வை. கோபால்சாமி:- இலங்கையைப் பற்றிபேச ஆரம்பித்திருக்கிறேன். அதற்குள் முடிக்கச் சொல்லுகிறீர்களே?

## அனுபவத்தை கூறட்டும்

ரஃபிகலியுல்லா (இ.காங்):- இலங்கைக்குப் போய் வந்த அவர், பயண அனுபவங்களை விவரிக்கட்டும்.

நஜ்மாஹெப்துல்லா:- அவர் விவரிக்க வேண்டியது நிறைய இருக்கிறது. ஆனால் இப்போது நேரமில்லை.

வை.கோபால்சாமி:- இப்போது நான் அதை விவரிக்கப் போவதில்லை. சில முக்கியமான கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன்.

## உண்மை செலவு

எனது கேள்வியெல்லாம் இந்தியா இத்தனை சிப்பாய்களைப் பலி கொடுக்க வேண்டுமா? இந்தியாவின் எந்த நன்மையைக் காப்பாற்ற இவர்கள் மடிய வேண்டும்? இலங்கையில் இந்திய ராணுவத்துக்கு ஆகும் செலவு எவ்வளவு? எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் இதுவரை செலவழித்திருக்கிறீர்கள்? இலங்கையில் இந்திய ராணுவத்துக்கு ஆகும் உண்மையான செலவு கணக்கை இந்த அரசு மூடி மறைக்கிறது உண்மையான கணக்கு வெளியே வரவேயில்லை. கண்டுபிடிக்க முடியாத வறு பல்வேறு செலவு கணக்குகளில் உண்மை விபரங்கள் மறைக்கப்பட்டுள்ளன.

## எண்ணிக்கை எவ்வளவு

இந்த மன்றத்தில் இது குறித்து உபேந்திரா கேள்வி கேட்டபோது எவ்வளவு செலவு இதுவரை ஏற்பட்டுள்ளது என்று விபரத்தைத் தர அமைச்சர் மறுத்துவிட்டார். அதேபோல் இலங்கையில் குவிக்கப்பட்டுள்ள இந்தியத் துருப்புகளின் மொத்த எண்ணிக்கை எவ்

வளவு என்ற எனது கேள்விக்கு ராணுவ அமைச்சர் கேசிபந்த் பதில் சொல்ல மறுத்துவிட்டார். உலக யுத்தம் நடந்தபோது கூட இங்கிலாந்து நாட்டின் பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ளக் கூடிய ரகசியக் கூட்டங்களில் ராணுவத்தில் ஏற்பட்ட இழப்புக்கள் மொத்தச் செலவு அனைத்து விபரங்களும் அவ்வப்பொழுது தரப்பட்டன.

## மறைப்பு

யுத்த காலத்திலே கூட அவர்கள் நாடாளுமன்றத்துக்குத் தகவல் தந்தார்கள். ஆனால் இந்தியாவில் மக்கள் வரிப்பணம் அந்நிய தேசத்தில் எவ்வளவு செலவாகிறது? எத்தனை சிப்பாய்கள் மடிகின்றார்கள் என்ற உண்மைகளை நாடாளுமன்றத்துக்கு தர இந்த அரசு தயாராக இல்லை. நாடாளுமன்றத்துக்கே தெரியாமல் மறைக்கின்றீர்கள். ஆம். நாட்டு மக்களுக்கே தெரியாமல் மறைக்கின்றீர்கள்.

## பயங்கர தவறு

இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் அணுகுமுறை பயங்கரமான தவறுகள் நிறைந்ததாகும். மனிதாபிமானமும், விவேகமும் இல்லாத கண்மூடித்தனமான போக்கால் இன்றைய விபரீத நிலை ஏற்பட்டுள்ளது. நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று விடுதலைப் புலிகள் உங்களுக்குத் தகவல் தந்த போதெல்லாம் நிராகரித்தீர்கள். பேச்சுவார்த்தைக்கான கதவுகளை மூடிக் கொண்டீர்கள். அதனால் தான் பிரேமதாசா விடுதலைப்புலிகளோடு பேசுகின்ற நிலை உருவாகியிருக்கிறது.

## புலிகளுக்கு சிறை

தமிழ்நாட்டில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தளபதி கிட்டு உட்பட 157 விடுதலைப்புலிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டது குறித்தும் அவர்களை இந்தியாவிலிருந்து கொண்டு போய் இலங்கையில் இந்திய ராணுவச் சிறை முகாம்களில் அடைக்கப் பட்டுள்ளதையும் குறித்து இதே மன்றத்தில் நான் கேள்வி கேட்டபோது, இந்தியாவின் உள்துறை அமைச்சர் விடுதலைப்புலிகளை இந்தியாவிலிருந்து அனுப்பி விட்டோம் என்றும் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தனக்குத் தெரியாதென்றும் பொறுப்பற்ற முறையில் பதில் சொன்னார்.

## அநியாயம்

இந்த விடுதலைப் புலிகளைச் சிகிச்சைக்காக இந்திய ராணுவ விமானங்களிலே அழைத்து வந்தீர்கள். இன்னும் வேதனை தரக்கூடிய வகையில் இந்தியா தனது உளவு ஸ்தாபனங்களின் மூலம் யாருடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்ததோ, எந்த தளபதி கிட்டுவுடன் பேச்சுவார்த்தை நடத்தியதோ அந்த கிட்டுவையே சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் அடைத்து விட்டு, போர் நிறுத்தம் அறிவித்ததைப் போன்ற அநியாயம், வேறு என்ன இருக்க முடியும்?

## ஊரை ஏமாற்ற

ஊர் உலகத்தை ஏமாற்றத் தான் போர் நிறுத்தம் என்றீர்கள். இதை விடக்கொடுமை வேறு என்ன இருக்க முடியும்? இந்திய ராணுவச் சிறை முகாம்களில் இங்கிருந்து கொண்டுபோன 148 புலிகளை அடைத்து வைத்துக்கொண்டு அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தனக்கு தெரியாது என்று உள்துறை அமைச்சரே பாராளுமன்றத்தில் தெரிவிக்கிறார்.

## வேட்டை பருந்து

வெளி விவகாரக் கொள்கையை வரையறுக்கிற இடத்தில் எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற போக்கினாலும் வேட்டைக்குச் செல்லும் பருந்துகளைப்போல செயல்படும் சில பேராசைக்காரர்களும் ஆதிக்கம் செலுத்துகிற காரணத்தால் பக்கத்து நாடுகளையெல்லாம் பயமுறுத்தி ஆதிக்கத்தை நிலைநாட்ட துடிக்கிற காரணத்தால் இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தவறுக்கு மேல் தவறு செய்திருக்கிறது. இந்தத் தவறில் நரசிம்மராவ் அவர்களுக்குப் பங்கில்லை. அவர்கள் மீது நான் அதிக மரியாதை வைத்திருக்கிறேன்.

## மனம் திறந்து

உலகம் எந்த திசையில் செல்கிறது என்பதை உணருங்கள். சோவியத் ரஷ்யாவை தீமையின் சாம்ராஜ்யம் என்று வர்ணித்த ரீகன்தான் அந்த சோவியத் அதிபரோடு உட்கார்ந்து பேச்சு வார்த்தை நடத்தினார். சோவியத் அதிபர் கோர்பசேவ் அறிவித்த எதையும் மூடிமறைக்காமல் மனந்திறந்து வெளிப்படுத்துதல் தத்துவமும், புனர் நிர்மாணத்திட்டமும் உலகம் பூராவையும் கவர்ந்து முக்கியத்துவம் பெற்றுவிட்ட நிலையில் மனம் திறந்து அணுகும் மனப்பான்மை வெளிவிவகார அமைச்சரின் அலுவலகத்திலும் குடியேறட்டும்.

## ஆய்வு செய்யுங்கள்

இலங்கைப் பிரச்சினையில் உங்கள் அணுமுறையை மறு ஆய்வு செய்யுங்கள்.
நமது வெளிவிவகா
செயலாளர் எஸ்.கே.
இலங்கைக்குப் போவதினை
பின்னணி என்ன? திரை
மறைவில் என்ன நடக்கிறது.
ஈழப்பிரச்சினைக்குத் தீர்வு
களை பேச்சுவார்த்தை
தான் ஒரே வழியென்று
இந்திய ராணுவத்தின் தாக்கு
தல் நிறுத்தப்படவேண்டு
மென்றும் தொடக்கத்
திலிருந்து திராவிட முன்
னேற்றக்கழகம் வலியுறுத்தி
வந்திருக்கிறது. அவை
களெல்லாம் உங்கள் செவி
களில் ஏறவில்லை. துப்
பாக்கி முனையில் தீர்வு
காண முனைகிறீர்கள்.

## 24 மணி நேரம் தாக்குதல்

முப்படைகளையும் ஏ
விட்டு விடுதலைப்பு
களையும், தமிழர்களை
தாக்குகிறீர்கள். பீரா
களின் ஷெல் தாக்கு
இரவிலும், பகலிலும் 24 ம
நேரமும் காடெங்கிலு
தமிழர் வாழும் பகுதியெ
லும், நடக்கின்றது. ஹெ
காப்டர் விமானங்கள் குண்
வீசுகின்றன. விடுதல

www.padippakam.com

புலிகளையும், தமிழர்களையும் அழிக்க முனை தாக்குதல் இது. இந்தியாவுக்கு என்ன நன்மை இதன் மூலம் சாதிக் போகிறீர்கள்?

இந்தியாவின் எ நலனைக்காக்க இந்திய துருப்புகளைப் பலியிடுகிற கள்?

உனடியாகப் போர் நிறு தம் அறிவித்து பேச்சு வார் ஷிதக்குத் தயார் என்று நீர கள் அறிவிக்காவிடில், வர போகும் நாட்களி நிலைமை மோசமாகும்.

இவ்வாறு வை.கோபா சாமி பேசினார்.

இந்த விவாதத்துக் வெளியுறவு மந்திரி நட சிம்மராவ் இறுதியில் பதிலளித்த போது மீண்டும் எழுந்த விவாதம் வருமாறு:-

### நிபந்தனை பற்றி பேச்சு

வை.கோபால்சாமி:- இ திய வெளி விவகார செயலாளர் சிங் இலங் போனதைப் பற்றிச் சொ னீர்கள். கடந்த ஆண் ஜனவரி 8-ந்தேதியும், மா. 11-ந்தேதியும் விடுதலை புலிகளின் தலைவர் பி பாகரன், இந்தியப் பிர மருக்கு அனுப்பிய கடித களில் நிபந்தனையற்ற பே சுக்கு புலிகள் தயாரா இருப்பதாக தெரிவித் போது நீங்கள் நிராகரித் கள். இத்தகைய இ தியாவின் கண்முடித்த மான போக்குத்தான் இ தாசாவும், புலிகளு பேசுகிற சூழ்நிலை உருவாக்கியிருக்கிறது.

### அடக்குமுறை

அடக்குமுறையைப் உப யோகித்து வந்த சிங்கள அரசும், பாதிக்கப்பட்ட விடு தலைப்புலிகளும் பேச்சு தொடங்கியுள்ளனர். இந்த சூழ்நிலையிலும் இந்திய ராணுவம் தாக்குதலை நிறுத்தவில்லை. இதன் நோக்கம் என்ன? போர் நிறுத்தம் செய்யப்போகிறீர் களா இல்லையா?

நரசிம்மராவ்:- கடந்த போனவற்றை யெல்லாம் இப்பொழுது கிளப்ப வேண்டாம். இலங்கை பிரச சினை குறித்து போர் கொண்டு நான் எதுவும் சொல்லத் தயாராக இல்லை.

### தகுதி இல்லை

வை.கோபால்சாமி:- ஈழத் தில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை அழித்து நாச மாக்கும் நோக்கத்தோடு ராணுவத்தாக்குதல் நடத்தும் உங்களுக்கு உலகத்தில் சமாதான தத்துவத்தைப் போதிக்க என்ன தகுதி இருக்கிறது? மீளமுடியாத சதுப்பு நிலத்தை நீங்களே ஏற்படுத்திக் கொண்டு அதில் சிக்கிக் கொண்டிருக் கிறீர்கள்.

இவ்வாறு வை.கோபால் சாமி பேசினார்.



இந்தியப் படையிடமிருந்து
விடுதலைப்புலிகள்
கைப்பற்றிய ஆயுதங்களை
வை. கோபால்சாமி பார்வையிடுகிறார்.

## அமைதியை படைக்கிறார்களாம்...

"இந்தியப்படை ஈழத்தில் இருந்து வெளியேறினால் ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்பு இல்லை- உயிருக்கு உத்தரவாதம் இல்லை" என்றெல்லாம் இந்திய வானொலியும், தொலைக்காட்சியும் அன்றாடம் கதைத்து புளுகு பிரசாரத்துக்காக உலக விருது பெறும் தகுதியை பெற்று விட்டன.

ஆனால் ஈழத்து மக்கள் இந்தியப்படையை அமைதிப்படையாகவே நினைக்கவில்லை. தமிழ் ஈழத்தில் யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் உள்ள திருமதி அன்னபூரணம் கனகநாயகம் என்ற அம்மையார் இந்தியப்படையினரால் தன் வீட்டினுள் வைத்தே 21-4-89 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார். (அதையே நினைவு நாள் சடங்கு பத்திரிகையில் ஆண்டவன் படைப்பு: 1950-01-08 என்றும் அந்நியன் பறிப்பு: 1989-04-21 என்றும் மிகுந்த துயரிலும் நயமாக குறிப்பிட்டுள்ளனர்.)

திருமதி அன்னபூரணம் அவர்கள் வீட்டிலிருந்த பல லட்சம் பெறுமதியான பணம், நகைகளையும் இந்தியப்படையினர் விட்டு வைக்கவில்லை. தமிழ்ச் சகோதரி திருமதி அன்னபூரணம் அவர்களின் 30-ஆம் நாள் சடங்கு (இது 'அந்தியேட்டி' என குறிப்பிடப்படுகிறது) அழைப்பிதழ் இங்கு பிரசுரிக்கப் பட்டுள்ளது.

—'யாழ்மகன்'

### அந்தியேட்டி அழைப்பிதழ்



அமரர் திருமதி அன்னபூரணம் கனகநாயகம்
அவர்கள்

ஆண்டவன் படைப்பு:
1950-01-08

அந்தியன் பறிப்பு:
1989-04-21

சிவமயம்

திரு/திருமதி ........................................ அவர்கட்கு

கடந்த 1989-04-21 வெள்ளிக்கிழமை பகல் இந்திய அமைதிகாக்கும் படையின் நியாயமற்ற துப்பாக்கிச் சூட்டின் காரணமாக உயிர் நீத்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரர் திருமதி அன்னபூரணம் கனகநாயகம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரிகைகள் நிகழும் சுக்கில வருடம் வைகாசி மாதம் 22ம் நாள் (1989-06-04) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். வைபவத்துக்கு வருகை தந்து கிரிகைகளிலே கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பண்ணாகம்,
சுழிபுரம்.
1989-05-25


இங்ஙனம்
குடும்பத்தினர்

தமிழ் ஈழத்தில் அமைதிப்படை!

படிப்பகம்

www.padippakam.com

நன்றி: புதிய ஜனநாயகம்



போன மச்சான் திரும்பி வந்தான் பூ மணத்தோட: ஈழ ஆக்கிரமிப்பிற்கு பிறகு, தப்பிவரும் இந்திய ராணுவத்தின் நெற்றியில் வெற்றி திலகமிட்டு வரவேற்கிறார்கள் சென்னை 'குடி'மககள் 'குடும்ப'ப் பெணகள். விடுதலை புலிகளால் வாலறுபட்டாலும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கடத்தல் இவற்றில் வரலாறு காணாத சாதனை புரிந்ததால் இந்த மகத்தான வரவேற்பு.

# ஈழம்: ஆக்கிரமிப்பாளருக்கு மூக்கறுப்பு!

எது நடந்து விடக்கூடாது என்று இந்திய பாசிச ராஜீவ் கும்பல் அஞ்சிக் கொண்டிருந்ததோ அது நடந்துவிட்டது! ''நீ நாட்டாண்மை பார்த்தது போதும்; கிடைக்கு இரண்டாடுகளைக் குதறியது போதும்: இனி எங்கள் விவகாரங்களை நாங்களே பார்த்துக் கொள்கிறோம். நீ வெளியேறிவிடு!'' என்று ஏகமான குரலில் இலங்கை மக்கள் அறிவித்து விட்டனர். இந்திய இராணுவம் வெளியேறுவதற்காக ஒரு மாதம் கெடுவைத்துள்ளது ஜே.வி.பி. அதிபர் பிரேமதாசா கொஞ்சம் 'தாராள' மனது வைத்து இரண்டு மாத அவகாசம் கொடுத்துள்ளார் ஓரிரு கைக்கூலி - துரோக கும்பல்கள் தவிர ஸ்ரீமாவோவின் சுதந்திரக் கட்சி, இலங்கை போலிக் கம்யூனிஸ்டு கட்சி உட்பட அனைத்து சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் அமைப்புகளும் இந்திய இராணுவம் வெளியேறிவிட வேண்டும் என்கின்றன.

''ஐயோ! விவகாரம் தீராமல் நான் வெளியேறிவிட்டால் - என்னுடைய நாட்டாணமையில்லா விட்டால் இந்த ஆடுகளுக்கு யார் காவல், இவர்களின் கதி என்ன ஆவது?'' என்று அடம்பிடிக்கிறது பாசிச நரி! ''இந்திய - இலங்கை ஒப்பந்தம் பூரணமாக நிறைவேறாத வரையில், ஏராளமான உயிர்பலியும் - பொருட்சேதமும் செய்து இந்திய இராணுவம் ஈட்டிய பலன்களை உறுதி செய்யாத வரையில், வடகிழக்கு மாநில அரசாங்கத்துக்கு போதிய அதிகாரங்கள் பகிர்ந்தளித்து, ஆயுதந்தாங்கிய குடிமக்கள் தொண்டாபடை வலுவாக அமைக்கப்படாத வரையில் இந்திய அமைதிப்படை விலகிக் கொள்ள முடியாது'' என்று இந்திய அரசு அறிவித்து விட்டது. ''படை விலக்கத்துக்கு தேதி - காலக் கெடு வைக்க முடியாது; இருநாடுகளும் பேசித் தீர்த்துக் கொள்ளும்'' என்று அரசு தந்திர - அதிகாரவர்க்க தொணியில் நாகரீகமாக இதையே பிரகடனம் செய்துள்ளது.

இன்னொருபுறம் இந்திய இராணுவம் ஈழத்தில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதற்கான பிரச்சாரத்தையும், இயக்கத்தையும் முழு வீச்சில் நடத்துகிறது. ஈழத்திலுள்ள தனது கைக்கூலி - அடிவருடி அமைப்புகளைக் கொண்டு தீர்மானம் போட்டு அறிக்கைகள் வெளியிடுகிறது ஆர்ப்பாட்டங்கள் - ஊர்வலங்கள் நடத்துகிறது. இங்கே இந்தியாவில் போலிக் கம்யூனிஸ்டுகள் முதல் பண்ருட்டி, சி.சுப்ரமணியம், ம.பொ.சி. போன்ற நாற்காலி அரசியல்வாதிகள் வரை பலரையும் கொண்டு பிரச்சாரம் செய்கிறது.

இந்திய இராணுவம் வெளியேறிவிட்டால் இலங்கை இரதக் களறியில் மூழ்கிப் போய்விடுமே என்று கணணீர் வடிக்கிறது. பாசிச ராஜீவ் கும்பல், மற்றபிற ஈழப் போராளி குழுக்களைப் புலிகள் கொன்று குவித்து விடுவார்கள்; தமிழர் - முஸ்லீம், தமிழர்—சிங்களவர் இனக் கலவரங்கள் வெடிக்கும்; தமிழர்களுககு எதிராக சிங்கள இராணுவக் கொலை வெறியாட்டம் மீண்டும் துவங்கிவிடும்; தெனனிலஙகையில் ஜே.வி.பி வனமுறை அராஜகம் அதிகமாகி, உள்நாட்டுப் போர் மூளும்; அங்கே வாழும் இந்தியப் பூர்வ குடிகளுககு எதிராக ஜே.வி.பி படு கொலைகள் நடககும்; புலிகள மீணடும் துரோகம் செய்து இலங்கை இராணுவத்துக்கு எதிராகப் போர் தொடுப்பார்கள என்று ஒரு கோரமான சித்திரம் வரைநது காட்டுகிறார்கள்.

தெற்கு ஆசிய பிராந்தியப் பாதுகாப்பு, உறுதிப்பாடு, அமைதிக்காக, இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு, தமிழர் நலனுக்காக கைமாறு பார்க்காது உதவி செய்வதாக இது வரை பீற்றிக் கொண்டு வந்த இந்திய அரசு தனது இராணுவத்தின் உயிர்த்தியாகங்கள், பொருட் சேதங்கள் பற்றி இப்போது ஒப்பாரி வைக்கிறது. ஜெயவர்த்தனேயின் வாரிசு பிரேமதாசா தேர்தலுக்குப் பிறகு புத்தரின் மறு அவதாரமாக மாறிவிட்டார் என்றும் இலங்கை அரசின் ஜனநாயக மாண்புகளையும் பிரச்சாரம் செய்து மாய்ந்து போன இந்திய அரசு, இப்போது சிங்கள இனவெறியின் கொடுமைகளைச் சித்தரிக்கிறது. இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதற்கான காரணத்தை பிரேமதாசாவுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குள் தேடுகிறது.

இந்திய இராணுவத்தை வெளியேற்றுவது என்கிற முடிவெடுப்பதற்குப் பிரேமதாசாவுக்கு எவ்வளவோ காரணங்கள் இருக்கலாம். அவை அனைத்திலும் முக்கியமானது வாக்களிததபடி இந்திய இராணுவம் எதையுமே சாதித்து விடவில்லை; புலிகளை ஒடுக்குவதில் தோல்வி கண்டுவிட்டது என்பது தான்! ஒப்பந்தம் கையெழுத்தான 48 மணி நேரத்தில் போர் ஓய்வு, 72 மணி நேரத்தில் போராளிகள் சரணடைவு, ஆயுத ஒப்படைப்பு என்று கம்ப்யூட்டர் கணக்குப் போட்டு முப்படைகளைக் கொண்டு போய் இறக்கியது பாசிச ராஜீவ் கும்பல். ஆனால் இரண்டு ஆண்டு ஆக்கிரமிப்புப் போருக்குப் பிறகும் ஈழப் போர்க்கள நிலைமை என்ன?

''புலிப்படை கொரில்லாக்களால் கிரமமான முறையில் இந்திய இராணுவத்தினர் கொல்லப்படுவது பற்றிய பத்திரிக்கைச் செய்திகள் மற்றும் இராணுவ மருத்துவமனைக்கு வந்து சேரும் காயமுற்றோரது எண்ணிக்கையும் இராணுவத்தின் தோல்வியைத்தான் நிருபிக்கின்றன; வெற்றியைக் குறிக்கவில்லை'' என்று எழுதுகிறது பாசிச ராஜீவின் பிரச்சார ஏடு சண்டே. ''நடந்தவற்றைத் திரும்பிப் பார்க்கும் போது இராணுவத்தின் இலங்கை அனுபவங்கள் சோகமயமான தவறுகளாகத்தான் தெரிகிறது'' என்றும் அது கூறுகிறது.

''5000 பேர்களாக இருந்த போராளிகளை 1500 பேர்களாக ஒடுக்கிவிட்டோம்; ஆனால் இன்னமும் பலர் புதிதாகப் போராளிகளின் படையில் சேர்கிறார்கள்.'' என்று இந்திய உளவுத் துறை கூறுகிறது. ''பயிற்சி பெற்ற போராளிகள் தவிர ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் புலிகளுக்கு, இருக்கிறார்கள். இப்படியே போனால் புலிகளை முற்றாக ஒழித்துக்கட்ட இன்னமும் பத்தாண்டுகள் ஆகும். ஆனால் கடந்த 18 மாதப் போருககுப் பிறகு மேலும் பத்தாணடுகள்


www.padippakam.com

போரிடுவது பயனளிக்குமா? மக்கள் ஆதரவுடைய ஒரு கொரில்லா சக்தியை ஒடுக்குவது சாத்தியமே இல்லை; இதை மிஜோராம், மணிப்பூர், நாகாலாந்து, திரிபுரா ஆகிய மாநிலங்களில் மேற்கொண்ட கலக எதிர்ப்பு நடவடிக்கைகள் சந்தேகமின்றி நிருபித்து விட்டன. இலங்கையில் இந்திய இராணுவத்தின் நிலைமை இன்னும் படு மோசமாக உள்ளது'' என்று இராணுவ அதிகாரிகள் இரகசியமாக கூறுகின்றனர்.

1500 போராளிகளை 48000 இராணுவத்தினா, விமானப்படை, கடற்படை உதவியோடு ஒழித்துவிட முடியவில்லை. இவையும் அதிகாரபூாவ புள்ளி விவரங்கள். உணமையில் ஒரு லட்சம் துருப்புகள், கவச வணடிகள், ஏவுகணைகள், ஹெலிக்காப்டர்கள், துரித வேகப் படகுகள் ஆகியன இருந்தும், இரண்டாண்டுகள் போரிட்டும் புலிகளை ஒடுக்க முடியவில்லை. 1000 சிப்பாய்கள் - அதிகாரிகளைப் பலி கொடுத்து 2000 கோடி ருபாய் கொட்டியும் கண்டது தோல்வி தான்! இன்னும் மக்கள்திரள் படுகொலைகள், கற்பழிப்பு - கொள்ளை குறையாடல் முதலிய அட்டூழியங்கள். இப்படிப்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பை ஆதரிப்பதால் உள்நாட்டில் எநத அரசு தான் வெறுப்பு, ஆத்திரம், நெருக்கடிக்கு ஆளாகாது? இந்திய இராணுவத்துக்கும் நிலைமை தெளிவாகி விட்டது.

''இன்று, இலங்கை அரசாங்கமும் நாங்கள் இருப்பதை விரும்பவில்லை; பெரும்பான்மையான இலங்கை மக்களும் எங்களை வெறுக்கிறார்கள் - எதிர்க்கிறார்கள். இலங்கையில் நாங்கள் இருப்பதை நமது நாட்டு மக்களும் விரும்பவில்லை. எனவே எந்தக் கேட்டிற்காக நாங்கள் அங்கிருக்க வேண்டும்?'' என்று இந்திய இராணுவ மேஜர் கேட்கிறார். ''எந்த இராணுவ அதிகாரியையாவது சீண்டிப் பாருங்கள்! இந்தியாவின் இலங்கைக் கொள்கையைக கடுமையாக எதிர்ப்பார். இதனால் இந்திய இராணுவ உயர் அதிகாரிகள பீதியடைந்துள்ளனா: இலங்கையில் நமது இராணுவ நடவடிக்கைபற்றி கருத்துக் கூறினாலோ, செய்தி கொடுத்தாலோ இராணுவக் கோர்ட்டில் விசாரிக்கப் படுவார்கள் என்று உத்திரவு போட்டுள்ளார்கள். எவ்வாறாயினும் இலங்கை நடவடிக்கை மக்களின் ஆதரவில்லாததாக உள்ளது'' என்று ராஜீவின் ஊது குழலான ''சண்டே'' எழுதுகிறது.

எனவே இந்திய அரசு சமீப காலமாக ஒரு தந்திரத்தை மேற்கொண்டு வருகிறது. இலங்கையில் இந்திய இராணுவப் பணிகள் ஏறக்குறைய முடிந்து விட்டன: அதிகாரப்பகிர்வு, மக்கள் தொண்டர் படை அமைத்து ஆயுதப் பயிற்சி, மாகாண அரசை வலுப்படுத்துவது ஆகியவற்றை நிறைவேற்றுவது தான் பாக்கி; எனவே பகுதி பகுதியாகப் படைவிலக்கம் என்ற நாடகமாடுகிறது. கடந்த ஏப்ரலில் 8,000 துருப்புக்களை இலங்கையில் இருந்து திரும்ப அழைத்துக் கொணடது. இந்தப் படை விலக்கல் உண்மையானது தான் என்று காட்டிக் கொள்வதற்காக சீமான் வீட்டுப் பெண்களை வைத்து வீர - வெற்றித் திலகமிட்டு ஆர்ப்பாட்ட வரவேற்புக் கொடுத்தது. முந்தைய படை விலக்கல்கள் கூட போலியானவை தான் என்பதை ஒப்புக் கொள்ளும் அரிச்சந்திர வேஷம் கட்டிக் கொண்டது. ''கடந்த காலங்களில் பிரச்சார நோக்கத்துக்காகப் படை விலக்கல்களை அடையாளத்துக்குச் செய்ததுண்டு. ஆனால் அவை போலியானவை. உண்மையில் துருப்புக்களின் எண்ணிக்கையைக் குறைக்கவில்லை. அதிபர் தேர்தலை ஒட்டி படை விலககல் நாடகமாடும்படி பிரேமதாசா கேட்டுக் கொண்டபடி மூன்று பட்டாளியன்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, மீண்டும் வேறு மூன்று பட்டாளியன்களை அனுப்பி விட்டோம்'' என்று இராணுவத் தலைமையகமே ஒப்புக் கொண்டுள்ளது.




''இந்திய பொருட்களைப் புறக்கணிப்போம்'' - இலங்கையில் ஜெ.வி.பி.யினர் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

உண்மை என்னவென்றால் ஈழ ஆக்கிரமிப்புப் போரினால் இந்திய இராணுவத்துக்குள் பீதி ஏற்பட்டுள்ளது. அவ்வப்பொழுது பழைய துருப்புக்களை மாற்றி புதியவர்களை இராணுவம் அனுப்பிக் கொண்டே இருக்கிறது. 50,000 சாதாரணப் படையினரைவிட 15,000 அதிரடிப் படையினரை வைத்துக் கொள்ளலாம் என்று யோசிக்கிறது. இவர்களோடு மக்கள் தொண்டர் படை என்ற ஈழதுரோக கூலிப் பட்டாளத்தையும் வைத்துக் கொண்டு ஆக்கிரமிப்பை நிரந்தரமாக்கத் திட்ட மிட்டுள்ளது. இதை மனதில் வைத்துக் கொண்டு தான் கடந்த ஏப்ரல் 24ந் தேதி புது டில்லியில் நடந்த இராணுவ அதிகாரிகள் மாநாட்டில் ''இலங்கையில இருந்து அமைதிப் படையை முற்றிலும் விலக்கிக் கொள்வது பற்றிப் பாரிய முறையில் சிந்திக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது'' என்று பிரதமர் ராஜீவ் அறிவித்தார்.

அப்போது புலிகள் - பிரேமதாசா பேச்சு வார்த்தையும் நடக்கவில்லை. இந்தியப் படை வெளியேற வேண்டும் என்று பிரேமதாசா கோரவோ, கெடுவைக்கவோ இல்லை. இருந்த போதும் பிரதமர் ராஜீவ் தாமே முன் வந்து மேற்கண்டவாறு பேசினார். இப்போது முறையான கோரிக்கை வந்துவிட்டது: ஆனால் மேல் வாயை ஒரு கையிலும் கீழ் வாயை மற்றொரு கையிலும் மூடிக் கொணடார். ஆனால் அவருடைய அடிவருடிகள், கூலிப் பிரச்சாரகள் எகிறிக் குதிக்கிறார்கள். ''இந்திய இராணுவத்தை வெளியேற்றக் கூடாது. வெளியேற்றினால் ஆயதம் தூக்குவோம்-தனி ஈழம் அமைத்தே தீருவோம்'' என்று சபத மிடுகிறார்கள் ஈழ துரோகிகள். இலங்கை பற்றிய இந்தியாவின் இராணுவ, அரசியல் கொள்கைகள் அனைத்தும் படுதோல்வி அடைந்து விட்டன. பாசிச ராஜீவ் கும்பல் மற்றும் அதன் பாதந் தாங்கிகள் தவிர அனைவரும் இப்போது இதை ஒப்புக் கொள்கிறார்கள். ''இன்னும் கூடுதலான இழப்புகளையும், அவமானததையும் சநதிக்கும் முன் இந்திய இராணுவம் விலகிக் கொள்வது தான் கௌரவமானது'' என்று படையெடுப்பை ஆதரித்தவர்களில் கூட பெரும் பகுதியினா உபதேசிக்கிறார்கள். இருந்த போதும், ''இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றி விட்டுத்தான் அமைதிப்படை வெளியேறும்'' என்று அடம்பிடிக்கிறது பாசிச ராஜீவ் கும்பல்.

வடக்கே நேபாளத்துக்கு எதிராகப் பொருளாதார முற்றுகை, தெற்கே இலங்கை ஆக்கிரமிப்புப் போர் இரண்டிலுமே தோல்வியுற்ற பாசிச ராஜீவ் கும்பலின் தெற்கு ஆசிய பிராந்தியக் கனவுகள் - ஆசைகள் கருச்சிதைவு அடைவது தெளிவாகவே தெரிகிறது. இருந்த போதும் பாசிஸ்டுகள் யதார்த்தத்தை ஒரு போதும் அங்கீகரிப்பதில்லை. தோல்விகள் அவாகளை மேலும் மூர்க்கமான சாகசங்களில் ஈடுபடவே தூண்டும்! எனவே ஈழதுரோகிகளின் ''வேண்டுகோளை'' ஏற்று இலங்கை அரசு மற்றும் மக்கள் விருப்பத்துக்கு எதிராகவும் ஆக்கிரமிப்பைத் தொடரவும் விரிவான போரில் நாட்டை ஈடுபடுத்தவும் துணியலாம்! அல்லது படை பலத்தைக் காட்டி பிரமதேசாவைப் பணிய வைத்தும் ஆக்கிரமிப்பைத் தொடரலாம். எவ்வாறாயினும் முன்பைவிட கூடுதலான உயிர் பலியும் பொருட் சேதமும் நேரும். ஏனெனில் இருநாட்டு மக்களின் விருப்பத்துக்கும், இந்திய இராணுவத்தின் அதிருப்திக்கும் கூட எதிரான ஆக்கிரமிப்புப் போர் கடும் எதிர்ப்பையே எதிர்கொள்ளும்.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களையும், தேச துரோகிகளையும் தனிமைப் படுத்துவதில் ஜே.வி.பி.யினரும், புலிகளும் அரசியல் ரீதியில் சாதகமான நிலைமையைப் பெற்றுள்ளார்கள் என்பது உண்மைதான்.

* * *

*அன்புள்ள அல்லி!*

*தமிழர்களின் நலனைக் காக்கத்தானே இந்தியப்பட இலங்கையில் இருக்கிறது? (சீ. இரா. சீனிவாசன், பட்டுக்கோட்டை)*

***இந்தியாவுக்கு ஒரு இராணுவ தளம் வேண்டும். அதற்காக ஈழத்தமிழனின் முதுகில் ஏறி உட்கார்ந்து இருக்கிறது!***

* * *

நமது புதிய வெளியீடு;

புதிய பாடல்கள்; பிரபலமானவர்களின் குரலில்;




பாடியவர்கள் - பாடலாசிரியர்

| பாடியவர்கள் | பாடலாசிரியர் |
|---|---|
| A காற்றும் ஒருகணம் (T.L. மகாராஜன்) | புதுவை இரத்தின துரை |
| விசும் காற்றே தூது (வாணி ஜெயராம்) | புதுவை இரத்தின துரை |
| அடைக்கலம் தந்த வீடுகளே (தினேஷ்) | காசி ஆனந்தன் |
| காகங்களே! காகங்களே (MS ராஜேஸ்வரி) | புதுவை இரத்தின துரை |
| B பொங்கிடும் கடற்கரை (ஜெயச்சந்திரன்) | புதுவை இரத்தின துரை |
| கண்மணியே கண்ணுறங்கு (பி. சுசிலா) | புதுவை இரத்தின துரை |
| நடடா ராசா மயிலைக்காளை (மலேசியா வாசுதேவன்) | புதுவை இரத்தின துரை |
| ஒப்புக்கு போர்த்திய (நாகூர் பாபு) | இன் தலாப் |
| தென்னங்கீற்றில் தென்றல் (மனோ - வாணி ஜெயராம்) | புதுவை இரத்தின துரை |

வெளியீடு:- தமிழீழ விடுதலைப்புலிகள் (நிதர்சனம்)

இசை:- தேவேந்திரன்

ஒன்றின் விலை:- 15 குரோனர்

உங்களின் தேவைகளுக்கு உங்கள் பகுதி பொறுப்பாளர்களுடன் அல்லது தமிழர் நலன்புரி மன்ற அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்:-

தொடர்புகளுக்கு:-


**THAMILAR NALLANPURI MANTRAM**
**(Tamilsk Velfaerdsforening)**
**Postbox 47**
**7600 Struer**
**Denmark**

தொலைபேசி:- 07. 852414

www.padippakam.com

# 05 யூலை 1974

பதினைந்து வருடங்களுக்கு
முன்னர் தமிழீழ விடுதலைக்கான
ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த
மாபெரும் போராளி....



உயிர் தமிழுக்கு - உடல் தமிழ் மண்ணுக்கு தந்த
- பொன்னுத்துரை சிவகுமாரன் -
தோற்றம் : 26-8-1950 மறைவு : 5-6-1974

"புலிகளின் தாகம்
தமிழீழ தாயகம்"